பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 14 சனிக்கிழமை 28.05.2022 கதிர் 204

**இனி இது ரகசியம் அல்ல!**

நான் ஆரம்பப் பாடசாலையில் படித்த காலத்தில் எங்கள் வகுப்பில் ஒரு பிரச்சினை. ஒரே சமயத்தில் ஒரே பெயரில் நான்கு பேர் எங்கள் வகுப்புக்கு வந்துவிட்டனர். அந்த நேரத்தில் ஸ்ரீதரன் என்ற பெயர் பரவலாக பலருக்கும் வைக்கப்பட்டது. 2



# ரணில் அமைத்தது புதிய அரசா? நாணய நிதியம் நம்பவே நம்பாது!

## அடித்துக் கூறுகின்றார் சுமந்திரன்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)
யாழ்ப்பாணம்,மே. 28

“ராஜபக்ஷக்களைக் காப்பற்றப் பிரதமர் பதவியில் ராஜபக்ஷக்களால் அமர்த்தப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை புதிய அரசு என சர்வதேசம் நாணய நிதியம் நம்பப் போவதில்லை.”

- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு உறுதிபடக் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலைஅவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். 11

## கோட்டாபய - ரணில் அரசின் நாடகமே 21ஆவது திருத்தம்

### இப்படிச் சாடுகின்றது சஜித் அணி



அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கோட்டாபய - ரணில் தலைமையிலான அரசால் நாடகம் அரங்கேற்றப்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் 2

## கூட்டமைப்பினரின் பங்குபற்றலுக்காக கட்சித் தலைவர்கள் காத்திருக்க முடிவு

### 21 அவது திருத்தம் பற்றிய முடிவு ஒத்திவைப்பு

21ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்றுப் பிற்பகல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பிரதமரின் அலுவலகத்தில் இடம்



பெற்றது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங்குபற்றாதமையால் முடிவெடுப்பது 11

## யாழ்ப்பாண மாநகர சபையை கலைப்பதில் ஆளுநர் தீவிரம்!

### தேர்தல் ஆணையம், சட்டமா அதிபருக்கு அவர் கடிதம்

(ந.லோகதயாளன்)
யாழப்பாணம்,மே.28

இனமுரண்பாடுகளை ஏற்படுத்தும் யாழ்ப்பாணம் மாநகர சபையைக் கலைக்க நடவடிக்கை எடுங்கள் என்ற சாரப்பட தேர்தலகள் 2

## சாணக்கியன் மீது வழக்கு போடுவாராம் தயா கமகே



மக்கள் வங்கியில் இருந்து முந்நூறு கோடி ரூபா கடன் பெற்றுக்கொண்டு மூன்று வருடமாக ஒரு சதமேனும் செலுத்தவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் என்மீது பொய் குற்றச்சாட்டு 11

## பல நாடுகளையும் ஏமாற்றினோம் எங்களுக்கு இனி யார் உதவுவர்?

### விசனத்துடன் சம்பிக்க ரணவக்க கேள்வி



நாம் வங்குரோத்து நிலையில் உள்ளோம். பல்வேறு நாடுகளை ஏமாற்றியுள்ளோம். இதனால், வெளிநாட்டு உதவிகள் எமக்கு முழுமையாக கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். 2

## விபத்தில் அதிபர் சாவு

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை அதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை 2

## இந்தியா - ஜப்பான் சேர்ந்து இலங்கைக்கு உதவ முடிவு!



பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கைக்கு உதவும் விடயத்தில் இந்தியாவும் ஜப்பானும் இணைந்து பணியாற்றுவதற்கு இணங்கியுள்ளன என ஜப்பான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் டோக்கியோவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஜப்பானியப் 2

## விமலின் மனைவி மேன்முறையீடு அதனால் சிறைத் தீர்ப்பு நிறுத்தம்?

### எனினும் திங்கள் வரை உள்ளே!



நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸவிற்கு எதிரான இரண்டு வருடச் சிறை என்ற தீர்ப்பை எதிர்த்து அவரது சட்டத்தரணிகள் மேன்முறையீடு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. 2

## ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ செயலணி இன்றுடன் செயற்பாடுகள் முடிவுக்கு



கொழும்பு,மே28

‘ஒரு நாடு; ஒரே சட்டம்’ என்ற ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடைகிறது.

அது நீடிக்கப்பட மாட்டாது என அதன் தலைவர் வண. கலகொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், ஒரு நாடு, ஒரே சட்டத்திற்கான 2

## பெற்றோலுடன் பவுஸர் குருநாகலில் கவிழ்ந்தது

குருநாகலில் எரிபொருள் பவுஸர் ஒன்று வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பில் இருந்து கிண்ணியா நோக்கி எரிபொருளை ஏற்றிக் கொண்டு சென்ற பவுஸர் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து ஏற்படும் போது பவுஸரில் 13,200 லீற்றர் பெற்றோல் இருந்துள்ளமையுடன் பெருமளவிலான எரிபொருள் இதன்போது கசிந்து வீணாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 2

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப்பெயரில்நான்குபேர். அடையாளம் காண்பதில் சிக்கல். அதனால் நாங்கள் ஒரு வழி செய்தோம். நான்கு பேரினதும் பெயருக்குமுன்னால்நாங்கள்வெவ்வேறு அடைமொழிசேர்த்துஅவர்களைஅழைத்து, ஆள்களைச் சுலபமாக வேறுபடுத்தி அடையாளம் கண்டுகொண்டோம். கொஞ்சம் குண்டாக இருந்தவர் 'குண்டு ஸ்ரீ'. மெல்லிய உயரமாக இருந்தவர் 'கொக்கு ஸ்ரீ'. சற்றுப் பெண் குரலில் பேசுபவர் 'பெட்டை ஸ்ரீ'. நான்காவது நண்பரை அவருடைய தந்தையார் பொலிஸில் வேலை பார்த்தமையால் அவரின் தந்தையாரின் தரத்தோடு ஸ்ரீ சேர்த்து அழைத்தோம்.

இந்த விவகாரம் இன்று ஏன் என்று நீங்கள் கேட்கலாம். இதே நிலைமைதான் நமது உத்தேச அரசமைப்புத் திருத்தத்துக்கும் வந்துவிட்டது.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பது தொடர்பாக ஆளாளுக்குப் போட்டி போட்டுக் கொண்டு சட்டத் திருத்தங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தால் எந்தத் திருத்தத்திற்கு, எப்படிப் பெயர் கொடுப்பது என்று சிக்கல். எல்லோரும் அரசமைப்புக்கான 21ஆவது திருத்தம் என்ற பெயரில் சட்ட திருத்த நகலைக் கொண்டு வந்தால் எதற்கு, எப்படிப் பெயர் கொடுப்பது?

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் பெரும்பாலான அதிகாரங்களை ஒன்றாக வெட்டிக் குறைப்பதற்கு வழி செய்யும் 21ஆவது திருத்தத்துக்கான சட்ட வரைவுப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து இருக்கிறது.

அதேசமயம் 19 ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்களை உள்ளடக்கிய திருத்தத்துக்கான சட்ட வரைவுப் பிரேரணை ஒன்றை விஜயதாஸ ராஜபக்ஷ எம்.பியும் அவர் சுயாதீன எம்.பியாக இருந்த போது சமர்ப்பித்திருந்தார். அதனால் அதனை அப்போது 22 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கான சட்ட வரைவுப் பிரேரணை என்று பெயரிட்டார்கள். இந்த இரண்டு பிரேரணைகளுமே நாடாளுமன்றத்தில் முதல் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு இப்போது உயர்நீதிமன்றப் பரிசீலனைக்கு வந்து விட்டன.

நேற்று உயர்நீதிமன்றம் இந்த இரண்டு திருத்தச் சட்ட மூலங்களையும் கவனத்தில் எடுத்தது. ஆயினும் 2 ஆவது திருத்தச் சட்டம் – அதாவது தனிப்பட்ட எம். பியாக விஜயதாச ராஜபக்ஷ சமர்ப்பித்த – சட்ட மூலம் வாபஸ் பெறப்படுவதாக அவரது தரப்பில் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. விஜயதாஸ ராஜபக்ஷ தனிநபர் எம். பி. என்ற முறையிலே அந்த சட்ட மூலத்தைச் சமர்ப்பித்து இருந்தார், ஆனால் இப்போது அவர் நீதி அமைச்சராகிவிட்டார், அதனால்அந்தமுன்னையசட்டமூலத்தை அவர் வாபஸ் பெறுகிறார் என உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. நீதிமன்றம் அதை ஏற்றுக் கொண்டது.

மற்றைய சட்ட மூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் விசாரணைகளை ஆரம்பித்தது. 6 பேர் அந்த சட்டமூலத்திற்கு எதிராக மனுச் செய்திருந்தார்கள். அவர்களில் ஐவரின் மனுக்கள் நேற்று பரிசீலனை செய்யப்பட்டன. ஆறாவது மனுவின் மீதான பரிசீலனை திங்களும் தொடர்ந்து, விசாரணை செவ்வாய் வரையிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார சமர்ப்பித்து இருந்தாலும், அந்தச் சட்டமூலத்தை முழுமையாக தயாரித்த பிதாமகர் யார் தெரியுமா?

இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரண்டு வாரங்களுக்கு முன்னர் வரை எதிர்க்கட்சியில் அமர்ந்து இருந்த போது, 'எதிர்க்கட்சித் தரப்பினரின் சட்டமா அதிபர்' என்று அவர் விளித்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்தான். எனினும் அரசியல் காரணங்கள் கருதியோ என்னவோ உயர் நீதிமன்றத்தில் அந்த சட்டமூலம் மீதான விசாரணையில் அவர் முன்னிலையாகி வாதாடவில்லை. அவருக்குப் பதிலாக சட்டத்தரணி சுரேன் பெனாண்டோ சட்டமூலத்தை ஆதரித்து வாதாடி வருகிறார்.

இதற்கிடையில. அரசமைப்புக்கான 21 ஆவது திருத்தம் என்ற பெயரில் மற்றொரு சட்டமூலத்தை புதிய நீதி அமைச்சர் என்ற முறையில்விஜயதாஸராஜபக்ஷஇப்போது வரைவு வடிவத்தில் சமர்ப்பித்திருக்கிறார். அது தொடர்பில் நேற்று அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூடி ஆராய்ந்தார்கள். இந்தக் கூட்டத்தில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் எவரும் பங்குபற்றாத காரணத்தினால் மீண்டும் அவர்கள் பங்கு பெறுவதற்கு வசதியாக அடுத்த வெள்ளியன்று அதைப் பற்றி பரிசீலிப்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. அரசு சமர்ப்பித்த இந்தத் திருத்த வரைவு திருப்தி தரவில்லை, 19 ஆவது திருத்தத்தில் இருந்த விடயங்கள் முழுமையாக இதில் உள்வாங்கப்படவில்லை என்று தமிழ்க் கட்சிகள் உட்பட எதிரணித் தரப்புகள் வன்மையாக ஆட்சேபித்து வருகின்றன. அந்தத் திருத்த வரைவு இன்னமும் அமைச்சரவையில் இறுதி செய்யப்படவும் இல்லை. நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுமில்லை. அடுத்த வெள்ளிக்கிழமை மீண்டும் கட்சித் தலைவர்கள் கூடிபேசிய பின்னர் அதுபற்றி தீர்மானம் எடுக்கப்படும் என்று கூறப்படுவதால் காலம் இழுபடும் என்று தெரிகிறது.

அது வரும்போது அதற்கும் 21 ஆவது திருத்தம் என்று பெயர் வைப்பார்களா? தெரியவில்லை. அல்லது அந்தந்தப் பிரேரணையை அல்லது திருத்த சட்ட வரைவை சமர்ப்பிக்கும் தரப்புகளின் பெயரை முன்னால் குறிப்பிட்டு அவர்களின் பெயரோடு சேர்ந்து அந்தச் சட்ட மூலம் 21 ஆவது திருத்தம் என அழைக்கப்படுமா என்பதும் தெரியவில்லை. 21 ஆவது திருத்தம் என்ற பெயரில் பல சட்டமூலங்கள் வந்தால் அவற்றைக் கையாள்வதற்கான ஒரு வழிவகையை நாடாளுமன்றமும் நீதிமன்றமும் தேட வேண்டியிருக்கும்.

***

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பார்கள். அந்த மாதிரி வேலை ஒன்றைச் செய்திருக்கிறார் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர் தயா கமகே.

அவருடைய பெயரில் 300 கோடி ரூபா மக்கள் வங்கியில் கடன் பெற்ற பின்னர்அது மீளச்செலுத்தப்படவில்லைஎன்று சாணக்கியன் எம்.பி. ஊடகவியலாளர் மாநாட்டில் அறிவிக்க, அதற்கு மறுப்புக் கொடுக்கப் போய் மாட்டிக் கொண்டிருக்கிறார் கமகே.

சாணக்கியன் எம்.பியின் குற்றச்சாட்டு விரல் உண்மையில் தயா கமகேயை நோக்கியது அல்ல. அவரது இலக்கு பிரதமர் ரணில். தமக்கு விருப்பமானவர்களுக்கு ரணில் அரச வங்கிகள் மூலம் தாராளமாக வாரி இறைத்தார் என்பதை வெளிப்படுத்தவே சாணக்கியன் முயன்றார். இடையில் விடயம் தெரியாமல் தயா கமகே தான் சாணக்கியனுக்கு மறுப்புக் கொடுக்கிறார் என நினைத்துக் கொண்டு நேற்று பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

இப்போது விவகாரம் கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக, மேலும் பல பழைய விடயங்கள் அம்பலமாகும் நிலைமைக்கு வந்துவிட்டது. 2019 க்கு முன்னர் ஏற்கனவே தயா கமகே சார்ந்த நிறுவனத்திற்கு இலங்கை வங்கி ஊடாக 500 கோடி ரூபா வழங்கப்பட்டு, அது பின்னர் அறவிடமுடியாத கடனாக அறிவிக்கப்பட்டமை வரை பல விடயங்கள் இப்போது ஆதாரமான செய்தி அறிக்கைகளோடு வெளிவந்து கொண்டிருக்கின்றன. பல விடயங்களை அவை பற்றிய ஒளிப்பதிவு செய்திகளோடு சாணக்கியன் தனது டுவிட்டர் செய்தியில் இணைத்திருக்கிறார்.

சாணக்கியனின் செய்தியை வீணாக மறுக்கப் போய் வினையை விலைக்கு வாங்கியிருக்கிறார் தயா கமகே என்றுதான் தோன்றுகின்றது. அவருக்கு எதிரான ஊழல் பட்டியல் நீளும் போன்றே தோன்றுகின்றது.

- மின்னல் -

## யாழ்ப்பாண மாநகர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கடிதம் அனுப்பியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

மக்கள் விரோதமாக செயல்படும் – மத குரோதமாக செயல்படும் – யாழ்ப்பாணம் மாநகர சபையை கலைப்பதற்கான முன்னெடுப்புக்குரிய பரிந்துரை தொடர்பில் வடக்கு ஆளுநர் எழுதிய கடிதம் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதனபோது சபையை கலைப்பதற்கான பரிந்துரையை முன் வைப்பது தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிக்கு உட்பட்டதாக இல்லாதபோதும், கடிதம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்குப் பதில் அனுப்புவதற்காக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து விளக்கத்தை கோரிப் பெறுவது என ஆணைக் குழுவின் நேற்றைய அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இக்கடிதத்தின் பிரதி ஒன்றை வடக்கு ஆளுநர் சட்டமா அதிபரிற்கும் அனுப்பி வைத்துள்ளார் என்றும் கூறப்பட்டது.

## கோட்டாபய - ரணில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறியதாவது:–

19 பிளஸ் என்பதே 21ஆவது திருத்தச் சட்டமூலமாக வருகின்றது என ஆளுங் கட்சி கூறியது. ஆனால், 19 மைனஸ் தான் முன்வைக்கப்பட்டுள்ளது. 19 இல் இருந்த முக்கிய அம்சங்கள் உள்ளடக்கப்படவில்லை.

அமைச்சரவை அனுமதி வழங்காத, 21ஆவது திருத்தச் சட்டமூலம் எதற்காகக் கட்சிகளுக்கு வழங்கப்படுகின்றது? இது காலத்தை இழுத்தடிக்கும் செயலாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நிறைவடையும் வரையே, இந்த நாடகம் நீடிக்கும். அதன்பின்னர் 21ஐக் கைவிட்டு விடுவார்கள் – என்றார்.

## விபத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிப்பர் வாகனம் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்தவர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கந்தையா சத்தியசீலன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்தில் படுகாயம் அடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கந்தையா சத்தியசீலன் முல்லைத்தீவு முத்தையன் கட்டு வலதுகரை முத்து–விநாயகர் தமிழ் கலவன் பாடசாலையின் அதிபர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பல நாடுகளையும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பானுக்கு மூன்றரை பில்லியன், சீனாவுக்கு 7 பில்லியன், இந்தியாவிற்கு 4 பில்லியன் என டொலரில் நிதியை வாங்கி ஏமாற்றியுள்ளோம். ஆகவே எவரும் அளவுக்கு அதிகமாக உதவப்போவதில்லை

நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட வேளையில், பிரதமர் பதவியை பெற்றுக்கொள்ள தகுதியானவர்கள் பலர் கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுகளை நடத்திக்கொண்டு இருந்த வேளையில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பொறுப்பேற்றமைக்காக முதலில் அவரை பாராட்ட வேண்டும். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவும் சில தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்கு முதலில் சகலரது ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளும் விதமாக சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க எப்படியும் சர்வதேச நாடுகளின் உதவிகளை பெற்றுக் கொண்டு எம்மை இந்த நெருக்கடியில் இருந்து மீட்பார். அதற்கிடையில் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தையும் முன்னெடுப்பார், அத்துடன் கடன் மீள் கட்டமைப்பு விடயங்களை முன்னெடுப்பார் என நம்புகின்றனர்.

ஆனால் இவை அனைத்துமே பிழைத்தால் அடுத்ததாக என்ன செய்வது என்பது குறித்து சிந்திக்க வேண்டும். – என தெரிவித்துள்ளார்.

## விமலின் மனைவி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் மேற்படி குற்றத்தீர்ப்புத் தொடர்பான மேன்முறையீட்டின் விசாரணை முடிவுறுத்தப்படும் வரை அத்தண்டனைத் தீர்ப்பும் இடைநிறுத்தப்பட வாய்ப்புள்ளாதாகத் தெரிகின்றது.

கொழும்பு மேல் நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்காக மேற்படி மேன்முறையீட்டு மனு கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று பிற்பகலே கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் நேற்று வெள்ளிக்கிழமை இந்தத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர், மேன்முறையீட்டு மனு மன்றில் உடனடியாக எடுக்கப்பட வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அதனால் சஷி வீரவன்ஸ தீர்ப்பு வழங்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார். நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை நீதிமன்றம் திரும்பவும் கூடிய பின்னர், அந்த மேன்முறையீடு நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அவர் வெளியே வரக்கூடியதாக இருக்கும் என்று கூறப்பட்டது.

போலியான தகவல்களை சமர்ப்பித்து சட்டவிரோதமாக இராஜதந்திரக் கடவுச் சீட்டைப் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில் சஷி வீரவன்ஸவைக் குற்றவாளியாக அறிவித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

மேலும், அவருக்கு இரண்டு வருடச் சிறை தண்டனையும் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இந்தத் தீர்ப்பை எதிர்த்து அவரின் சட்டத்தரணிகள் மேன்முறையீடு செய்துள்ளனர்.

## இந்தியா - ஜப்பான் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் புமியோ கிஷிடாவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது..

இந்திய – ஜப்பான் பிரதமர்கள் கடந்த மே மாதம் 24 ஆம் திகதி 'குவாற்' மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர், எரிசக்தி, முதலீடு மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இருதரப்பு பேச்சுகளை நடத்தியுள்ளனர்.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து, அவர்கள் இலங்கையின் நிலைமை குறித்து கலந்துரையாடியமையுடன், தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் நாட்டில் மோசமடைந்துவரும் மனிதாபிமான நிலைமைகள் தொடர்பில் இரு நாடுகளும் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்படுவதாக மீளவும் உறுதிப்படுத்தின என ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'ஒரே நாடு; ஒரே சட்டம்' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிந்துரைகளை ஏற்கனவே தாங்கள் தயாரித்துள்ளார்கள் எனவும், அந்த அறிக்கை விரைவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஜனாதிபதி செயலணியானது 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதியினால் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த வருடம் பெப்ரவரி 28 ஆம் திகதி அதன் பதவிக்காலம் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

இதன்படி, 'ஒரு நாடு; ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் இன்றுடன் 28ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெற்றோலுடன் பவுஸர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருநாகல் தீயணைப்புப் பிரிவினரின் பெரும் முயற்சியின் பின்னர் பவுஸர் மீண்டும் வீதிக்கு கொண்டுவரப்பட்டது.

விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், மழையுடனான காலநிலை காரணமாக வீதியில் இருந்து வழுக்கிச் சென்று விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

குருநாகல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கஸ்தூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பாரதத்தின் பரந்த உதவி

'வெளியுறவு விடயங்களில் அயல் தேசத்துக்கு முன்னுரிமை' என்ற நிலைப்பாட்டை கடைப்பிடித்து வரும் இந்தியா, அந்த அடிப்படையில் இப்போது பொருளாதாரத்தில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் இலங்கைக்கு இயன்ற பல வழிகளிலும் உதவி வருகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை விடயம் தொடர்பில் தாம் அதிக சிரத்தை கொண்டிருக்கின்றார், விசேட கவனம் செலுத்தியிருக்கின்றார் என்பதைத் தொடர்ந்தும் பிரதிபலித்து வருகிறார்.

நேற்று முன்தினம் தமிழகத்துக்கு வந்திருந்த அவர், அங்கு சென்னையில் நடைபெற்ற பொது நிகழ்வில் பேசும் போது கூட இலங்கை விடயத்தை விசேடமாகக் குறிப்பிட்டு, நெருக்கடி நிலையில் இருக்கும் இலங்கைக்கு முழு அளவில் உதவி செய்வோம் என்பதை ஈழத்தமிழர்களின் தொப்புள் கொடி உறவுகளான தமிழகத் தமிழர் மனதில் பால் வார்க்கும் வண்ணம், நம்பிக்கை ஊட்டும் விதத்தில், உறுதியளித்தார்.

இந்தச் சென்னை விஜயத்துக்கு முன்னர் கடந்த வார முற்பகுதியில் 'குவார்ட்' நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜப்பான் சென்றிருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அங்கும் – ஜப்பானிலும் – இலங்கை விவகாரம் குறித்துச் சிரத்தையுடன் கலந்துரையாடியிருக்கின்றார்.

நெருக்கடியில் இருக்கும் இலங்கைக்கு உதவி புரிவதற்கு இந்தியாவும் ஜப்பானும் கூட்டாக இணங்கியிருக்கின்றன என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

பிரதமர் நரேந்திர மோடிக்கும் ஜப்பானியப் பிரதமர் புமியோ கிஷிடாவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்து ஜப்பான் விடுத்த அறிக்கையில் இவ்வாறு இலங்கைக்கு இந்தியாவும் ஜப்பானும் கூட்டிணைந்து உதவுவது பற்றிய இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு நாடுகளின் தலைவர்களும் இலங்கையின் நெருக்கடி நிலைமை குறித்து விரிவாகக் கலந்துரையாடினர், இலங்கைக்கு உதவும் விதத்தில் இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று புரிந்துணர்வுடன் செயற்படுவது என இரு பிரதமர்களும் தீர்மானித்தார்கள் என்று ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் பணியை 'குவார்ட்' நாடுகள் அமைப்பு முன்னெடுக்க வேண்டும் என்ற ஒரு யோசனையை இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள பின்னணியிலேயே, இந்த இந்திய – ஜப்பான் கூட்டு உதவித் திட்டம் பற்றிய அறிவிப்பு வந்து இருப்பது கவனிக்கத்தக்கது. அந்த யோசனையைச் செயல்படுத்துவதற்கான ஆரம்பப் படியாக இந்தக் கூட்டு உதவித் திட்ட இணக்கப்பாடு அமைய முடியும்.

இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் வல்லாதிக்கம் அதிகரிக்கப்படுவதை ஒட்டிய சவாலை சமாளிப்பதற்காகவே அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகளும் சேர்ந்து குவார்ட் அமைப்பை உருவாக்கிக் கொண்டு செயற்பட்டு வருகின்றன.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கட்டமைப்பை உருவாக்கும் ஏற்பாட்டை குவார்ட் கூட்டமைப்பு முன்னெடுக்க வேண்டும் என்ற இலங்கைப் பிரதமரின் கோரிக்கை சீனாவின் கடன் பொறித் திட்டத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயலும் கொழும்பின் புதிய எத்தனமாகவே கருதப்படுகிறது.

குவார்ட் அமைப்பின் முக்கிய சக்தியான இந்தியா, இலங்கையின் இந்த அழைப்பை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, அந்த விடயத்தை முன்னகர்த்தி, சீனாவின் பிடியில் இலங்கை வீழும் ஆபத்தை நிரந்தரமாக வெட்டி விடுவதற்கான ஒழுங்கை முன்நின்று கவனிக்க வேண்டும்.

# நாட்டில் மருந்து தட்டுப்பாட்டிற்கு டொலர் நெருக்கடியே காரணம்!

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரிவிப்பு

நாட்டுக்கு நன்கொடையாகக் கிடைக்கப் பெறும் மருந்துகளை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமைக்கு டொலர் நெருக்கடியே பிரதான காரணம் என்றும் அதற்கு தாம் பொறுப்பு கூற வேண்டியதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாட்டில் தற்போது நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தெளிவுபடுத்தி வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுகாதாரத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ருவான் விஜேவர்தன, தொழிற்சங்கவாதிகளான சமன் ரத்னப்பிரிய மற்றும் ரவி குமுதேஷ் உள்ளிட்ட பலரது பங்கேற்புடன் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் நாட்டில் தற்போது நிலவும் மருந்து தட்டுப்பாட்டுக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பொறுப்புக்கூற வேண்டும் என்று குற்றஞ்சுமத்தப்பட்டது.

நாட்டில் நிலவும் எரிபொருள், சமையல் எரிவாயு, உணவு மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணி டொலர் நெருக்கடியாகும். எனவே இவற்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டுக்கு அவற்றை முகாமைத்துவம் செய்யும் நிறுவனங்கள் பொறுப்பாகாது என்பது தெளிவாகிறது.

மருந்து தட்டுப்பாட்டில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணியும் டொலர் நெருக்கடியே ஆகும். மருந்து தயாரிப்பிற்கான மூலப் பொருள்கள் மற்றும் மருந்து இறக்குமதி செய்வதிலும் டொலர் தட்டுப்பாடே தாக்கம் செலுத்துகிறது. அதேபோன்று மின்சாரம், வலுசக்தி, போக்குவரத்து உள்ளிட்ட சேவைகள் தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெறாமையின் காரணமாக மருந்து தொழிற்துறையும் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட காரணிகள் அனைத்தும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் நிர்வாகத்துக்கு அப்பாற்பட்டவையாகும்.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் மருந்து தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் வரையறையின் கீழ் எடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதை பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டுக்கு நன்கொடையாகக் கிடைக்கப் பெறும் மருந்துகளை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இதன்போது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இவ்வாறு நன்கொடையாகக் கிடைக்கப் பெறும் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் தரம் என்பன பரிசோதிக்கப்பட்டு, தாமதமின்றி அவற்றை விநியோகிப்பதற்கு பிரத்தியேகமான பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக மருந்து விநியோகம் எவ்வித தாமதமும் இன்றி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மருந்து மற்றும் மருத்துவ உபகரண தயாரிப்பு தொடர்பில் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் இதன்போது முன்வைக்கப்பட்டது. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு பிரத்தியேக பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் தயாரிக்கப்பட்ட 150 வகையான மருந்துகளின் தரம் உறுதிப்படுத்தப்பட்டு கடந்த 2 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தவிர பாதுகாப்பானது என உறுதிப்படுத்தப்பட்ட 20 மருந்து உற்பத்தி நிறுவனங்கள் கடந்த இரு மாதங்களுக்குள் பரிசோதனைக்கான அனுமதியைப் பெற்றுள்ளன. அத்தோடு இவற்றில் மேலும் 4 புதிய மருந்து உற்பத்தி நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமைகளால் இதுவரையில் அனுமதி வழங்கப்படாத நிறுவனங்களுக்கு துரிதமாக அனுமதியை வழங்குவதற்கு விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியிலும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் மருந்து தட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றனஎன்பதைத்தெரிவித்துக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களுக்காக சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் வருகை

## வஜிர அபேவர்தன கூறுகிறார்



நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இலங்கைக்கு உதவிகளை வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ள நிலையில், அடுத்த வாரம் நாட்டுக்கு வருகை தரவுள்ள குழு இறுதி இணக்கப்பாட்டை அறிவித்தால் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார் என அத்தியாவசிய சேவைகள் தொடர்பான குழுவின் தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையிலான முதற்கட்டப் பேச்சுகள் கடந்த ஏப்ரல் மாதம் வொஷிங்டனில் அமைந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றன. முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்றி, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்டோர் தலைமையிலான குழு இந்த பேச்சுகளை முன்னெடுத்திருந்தன.

அதனையடுத்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையடுத்து , புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் கொள்கைமட்டப் பேச்சுகள் தொடரும் என்றும் சர்வதேச நாணய நிதியம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கலாநிதி ஆறு.திருமுருகனின் பிறந்தநாளில் இளைய தலைமுறை ஆற்றலாளர்கள் விருது!

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ்பூத்த ஓய்வுநிலை அதிபரும் ஆன்மீகவாதியுமாகிய செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனின் பிறந்தநாள் இன்றாகும்.

அவரது 61 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு பிறந்தநாள் அறக்கட்டளையினரால் “இளைய தலைமுறை ஆற்றலாளர்கள் விருது வழங்கல் - 2022” நிகழ்வில் இரு இளம் சாதனையாளர்களைத் தெரிவுசெய்துள்ளார்கள்.

இந்த விருதுபெறும் சாதனையாளர்களாக பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சின்னையா கருப்பையா நவரட்ணராஜாவும் யாழ்.இந்துக்கல்லூரியின் ஆசிரியர் இராமச்சந்திரன் இரமணனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த இரு ஆற்றலாளர்களும் கலாநிதி ஆறு.திருமுருகனின் 61ஆவது பிறந்த நாளாகிய இன்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும் அறநிதியவிழாவில் கௌரவிக்கப்பட உள்ளார்கள்.

கலாநிதி ஆறு.திருமுருகனின் பிறந்தநாள் அறநிதியம் இந்த இருவரையும் இளம் ஆற்றலாளர்களாகத் தேர்ந்தெடுத்தமைக்கான காரணம் பற்றிய சிறு விவரம் கீழே தரப்பட்டுள்ளது.





## கலாநிதி எஸ்.கே. நவரட்ணராஜா

கலாநிதி எஸ்.கே. நவரட்ணராஜா பேராதனைப்பல்கலைக்கழகத்தின்பொறியியற் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். அவர் தனது ஆரம்ப கல்வியை டிக்கோயா போடைஸ் த.வி. இலும் இடைநிலை கல்வியை டிக்கோயா புளியாவத்தை த.ம.வியிலும் கற்றமையுடன் தனது உயர்தரத்தை ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியிலும் பயின்றுள்ளார்.

1994/1995 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் உயர்தர கணிதப்பிரிவில் அமரர் ஆசிரியர் ஜீவராஜனுடைய பெருமைக்குரிய முதலாவது தொகுதி மாணவராக ஹைலன்ஸ் கல்லூரியில் இருந்து பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்தில் இளமாணி பட்டத்தைப் பெறும் வாய்ப்பைப் பெற்றதுடன் இந்தப் பல்கலைக்கழகத்தில் கட்டடப் பொறியியல் பிரிவில் சிறந்த பெறுபேற்றுடன் முதலாம் தர சித்தியைப் பெற்று புலமைப்பரிசில்மூலம்அமெரிக்காவின்ஒக்லஹோமா பல்கலைக்கழகத்தில் பொறியியற் பிரிவில் முதுமாணிப் பட்டத்தையும் ஆஸ்திரேலியாவின் வொலாங்கொங் பல்கலைக்கழகத்தில் பொறியியற் துறையில் தனது கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

சிறுவயதிலிருந்து தனிப்பட்ட பகுதிநேர கணித ஆசிரியராகக் கடமையாற்றிய இவர், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாவதற்கு முன் அப்கொட் பெயார்லோன் த.வியில் அரசாங்க ஆசிரியராகக் கடமை புரிந்துள்ளார். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் தனது இளமாணி பட்டத்தை முடித்தபின் உதவி விரிவுரையாளராக பதவி வகிக்கும் வாய்ப்பையும் பெற்றார்.

அமெரிக்காவில் முதுமாணிப் பட்டத்தைநிறைவுசெய்தபின்கலிபோர்னியா மாகாணத்தில் Group Delta Consultants Inc என்னும் ஒரு தனியார் பொறியியல் நிறுவனத்தின் திட்ட பொறியியலாளராகவும் கலிபோர்னியா மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில்முறை பொறியியலாளராகவும் ஆறு வருடங்களாகக் கடமையாற்றியுள்ளார்.

2012 ஆண்டு தொடக்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பதவி வகிக்கும் இவர், மேலதிகமாக புவி தொழில்நுட்பவியல் பிரிவில் முதுமாணி பட்டம் வழங்கும்பிரிவின் ஒருங்கிணைப்பாளராகவும், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் போன்றவற்றின் பொறியியற் பீடங்களின் புவி தொழில்நுட்பவியல் பாடப் பிரிவில் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

இது தவிர க.பொ.த. உயர்தர பொறியியற் தொழில்நுட்ப பாட பிரிவின் தமிழ்மொழி மூலமான பிரதம பரீட்சகராகவும், e-Kalvi தொண்டு நிறுவனத்தின் மூலம் இலங்கையில் நடத்தப்படும் e-Kalvi செயற்பாடுகளுக்கான மலையக ஒருங்கிணைப்பாளராகவும், மற்றும் மலையகப் பல்கலைக்கழக மாணவர்களையும், பல்கலைக்கழக பட்டதாரிகளையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள ஸ்டெம் (STEM Team Hatton) அமைப்பினுடைய நிறுவுநராகவும் தலைவராகவும் மற்றும் அமரர் ஆசிரியர் ஜீவராஜன் ஞாபகார்த்த மாணவர் அமைப்பினுடைய தற்போதைய தலைவராகவும் சேவையாற்றி வருகின்றார்.

தனது சிறப்பு புவிதொழில்நுட்பவியல் பிரிவில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் 50 இற்கும் அதிகமான ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ள இவர், அமெரிக்க ஆய்வு சஞ்சிகை ஒன்றில் சமர்ப்பித்து வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரை ஒன்றுக்காக 2021 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் இலங்கையின் தேசிய ஆய்வு சபையின் (NRC) விஞ்ஞான ஆய்வுகளுக்கான உயரிய விருதான ஜனாதிபதி விருதினைப் பெற்று தனது பல்கலைக்கழகத்திற்கும் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மலையக சமூகத்துக்கும் மிகப்பெரிய பெருமையை சேர்த்துள்ளார்.

அது தவிர பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற் பீடத்தின் ஆராய்ச்சி சிறப்பு விருதையும் 2021 ஆம் வருடம் பெற்றுக்கொண்டுள்ளார். ரயில் போக்குவரத்து தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக திட்ட முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்து 2019 ஆம் ஆண்டு உலக வங்கியின் ஆய்வுகளுக்கான 4 கோடி ரூபா நிதி ஒன்றை பெற்று ஏறக்குறைய 12 மாணவர்களைக் கொண்டு அந்தத் திட்டத்தை ஆய்வு செய்து வருகின்றார்.

மலையக சமூகத்தில் டிக்கோயா போர்டைஸ்கொணக்கொல்லை தோட்டத்தில் சாதாரண தேயிலை தோட்டத் தொழிலாளியின் பிள்ளையாகப் பிறந்த இவர், மிகவும் கடுமையான பொருளாதார சவால்களுக்கு மத்தியில் தனது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புகள்மூலம்சிரத்தையானமுயற்சிகளினூடாக இந்த உயரிய பெருமைக்குரிய இடத்தை அடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## இராமச்சந்திரன் இரமணன்

இராமச்சந்திரன் – மீனாம்பாள் தம்பதிகளுக்கு கோப்பாய் மண்ணில் 1976.06.27 ஆம் திகதி இராமச்சந்திரன் இரமணன் மகனாக பிறந்தார்.

நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடைநிலைக்கல்வியையும் பின் உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும், விவசாய விஞ்ஞானமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை கொழும்பு பல்கலைக்கழகத்திலும், முதுவணிக நிர்வாகமாணி மற்றும் விஞ்ஞானக் கல்வியியல் முது விஞ்ஞானமாணி ஆகிய பட்டங்களை பேராதனைப்பல்கலைக்கழகத்திலும் பெற்றார்.

ஆய்வுத்துறைகள் பயிரியலில்:- சூழலைக்கட்டுப்படுத்திய மண்ணின்றிய பயிர்ச்செய்கையில் வெவ்வேறு வர்க்கத் தக்காளிப்பயிரின் மதிப்பீட்டாய்வு, முகாமைத்துவத்தில் உள்ளூர் தன்னார்வத் தொண்டுகளில் ஈடுபடுபவர்களின் சமூக முயற்சியாண்மை செயற்பாடுகளின் விடய ஆய்வுகள், கல்விநிர்வாகத்தில் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்கு பாடசாலைமட்ட முகாமையாளர்களின் சமூக முயற்சியாண்மைச் செயற்பாடுகளின் பங்குபற்றிய ஆய்வு போன்றவற்றை மேற்கொண்டுள்ளார்.

பயிரியல் துறையில் தற்காலிக விரிவுரையாளராக இருந்து சமூக அபிவிருத்தி, சமூகம் சார் செயற்பாடுகளில் ஆர்வம் காரணமாக இடைவிலகி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் யாழ்ப்பாணத்திலும், இறுதிப் போர்ச் சூழலில் வவுனியாவிலும் இடர்காலபணியையும் புனரமைப்புப் பணிகளையும் ஆற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. போரின் பின் 2009 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆசிரியராக இன்றுவரை தொடருகிறார். மூதூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் முதல் நியமனத்தைப் பெற்று பின்பு கண்டி அல்மனார் மகாவித்தியாலத்திலும் பின் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும், தற்போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கடமையாற்றுகிறார். உயர்தர இரசாயனவியல் மற்றும் வணிகத்துறையில் உயர்தர வணிகக்கல்வியையும் கற்பிக்கிறார்.

இதன் மூலம் மூவினத்து பல்கலாசாரங்கொண்ட ஆசிரியர் தொடர்பு மற்றும் மாணவர்களைக் கையாளும் அனுபவம் கிடைக்கப்பெற்றார். இலங்கை பாடசாலைகளில் தொழிற்றுறைக்கல்வியை அறிமுகம் செய்த போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கான பகுதித் தலைவராகக் கடமையாற்றினார்.

2021 ஆம் ஆண்டு கொவிட் - 19 தொற்றுத் தடுப்பு நடைமுறைகளால் ஏற்பட்ட கல்விப்பாதிப்பை நிவர்த்தி செய்ய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதன் அதிபர் இ. செந்தில்மாறன் தலைமையில் அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டு, நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி பாரியளவில் நடைபெற்ற கற்பித்தல் நுட்பங்கள் இலங்கைப் பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக அமையுமளவுக்குப் பெரும்பணி ஆற்றினார்.

இணையவழி மூலமாகவும், காணொலிகள் மூலமாகவும் பாடப்பரப்புகளைக் கற்பிக்க இரவு பகலாக பெரும் முயற்சிகளில் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் இறங்கினார்கள். இலங்கையிலுள்ள சகல மாணவர்களும் இலகுவாக இணையும் பொருட்டு வைபர், வட்சப் போன்ற சமூக ஊடகங்களை பயன்படுத்தி அனைவருக்கும் இலகுவாக இணையவழிக்கல்வியில் இணைய வசதியேற்படுத்தினார்கள். செயலட்டைகளை அச்சிட்டும், påØ³Äi¨å இல் அவற்றையும், காணொலிகளையும் சேமித்தும் மாணவர்களின் வீடு வீடாக வழங்கினார்கள். இதனால் பிரான்ஸைத் தலைமையகமாகக் கொண்ட În» என்ற பல்தேசியக் கூட்டுநிறுவனத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படும் உலகின் தலைசிறந்த ஆசிரியருக்கான கிறிஸ்ரல் பேனா விருது 2021 இல் இரமணனுக்குக் கிடைத்தது. இந்த விருதின் ஊடாகக் கிடைக்கப்பட்ட 5 ஆயிரம் யூரோ பணமும் (ரூ. 11 லட்சத்து 50 ஆயிரம் ரூபா) 1,000 அமெரிக்கடொலர் பெறுமதியான பொருள்களும் தான் கற்பிக்கின்ற யாழ். இந்துக்கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கி தன் சேவையின் பெருமையை நிலைநிறுத்தினார் இரமணன்.

இல்லற வாழ்வில் இரமணன் யோகலக்சுமி என்பவரைக் கைப்பிடித்தார். அவர் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவி. யாழ் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞான பட்டதாரி, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றுகின்றார்.

மூன்று செல்வங்களில் முதலாமவர் மகன்செல்வன் இரமணன்காருண்யன், கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 4 இல் கல்வி கற்கின்றார். வருணி, வர்தனி ஆகியோர் நான்கு வயதுடைய இரட்டைப்பெண் குழந்தைகளாவர்.

# இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் வரி வீதங்கள் மீண்டும் அதிகரிக்கப்படும்!

## அமெரிக்க ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் பிரதமர் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடியின் விளைவாகபொதுமக்கள்முகங்கொடுத்திருக்கும் துன்பத்தையும் அவர்களின் கோபத்தையும் தன்னால் நன்கு புரிந்துகொள்ள முடிவதாகத் தெரிவித்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெகு விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் முன்னர் இருந்ததைப் போன்று வரி வீதங்கள் மீண்டும் அதிகரிக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் இலங்கை சீனாவின் கடன் பொறிக்குள் சிக்கவில்லை என்றும், சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் முடிவடைந்ததன் பின்னர் சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் புளூம்பேர்க் என்ற ஆங்கில இணைய ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்ட விடயங்கள் தொடர்பில் விளக்கமளித்திருக்கின்றார்.

அந்நேர்காணலில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு–

**கேள்வி :** நிதி அமைச்சராக பதவி ஏற்றிருக்கும் நீங்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சில் எத்தகைய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும் ?

**பதில் :** சர்வதேச நாணய நிதியத்துடனான முதற்கட்ட பேச்சுகள் முடிவிற்கு வந்துள்ளன. அதில் நானும் கலந்துகொண்டிருந்தேன். சர்வதேச நாணய நிதியத்தால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையாகக் காணப்பட்ட போதிலும் , எதிர்வரும் 2025 ஆம் ஆண்டாகும் போது வரவு – செலவுத் திட்ட பற்றாக்குறை 2 சதவீதமாக இருக்க வேண்டும் என அவர்களால் வலியுறுத்தப்பட்டமை சிக்கலான விடயமாகவுள்ளது.

குறிப்பாக 2023 ஆம் ஆண்டளவில் பெருமளவிற்கு பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியாத நிலைமையே காணப்படும் என்பதால் இது சிக்கலானதாக இருக்கின்றது. அதே போன்று பொருளாதார மறுசீரமைப்பொன்றை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பாக இதன் போது வலியுறுத்தப்பட்டது. எமது பொருளாதாரம் ஏற்றுமதிகளை மையப்படுத்தியதாக மாற்றப்பட வேண்டும். அது மாத்திரமன்றி பொருளாதாரக்கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்களவிலான மாற்றங்கள் அவசியமாகின்றன.

**கேள்வி :** இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கப் போகிறேன் என கூறியிருந்தீர்கள். அதில் வரி அறவீட்டில் அதிகரிப்பு உள்ளடங்கலாக சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்பார்ப்புக்கள் எவை?



**பதில் :** ஆம். இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் வரிகள் அதிகரிக்கப்பட்டு பழைய நிலைக்கு கொண்டு வரப்படும். இருப்பினும் கல்வித்துறை , சுகாதாரத்துறை ஆகியன தவிர்ந்த ஏனைய துறைகளுக்கான செலவுகளைக் குறைப்பதே வரவு– செலவுத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். அவ்வாறு அநாவசிய செலவீனங்களைக் குறைப்பதன் மூலம் அவற்றை மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சமூகம் சார் நடவடிக்கைகளுக்காகச் செலவிட முடியும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக பெருமளவானோர் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் முகங்கொடுத்திருக்கும் துன்பத்தை என்னால் நன்கு புரிந்து கொள்ள முடியும். அவர்களின் கோபத்தையும் என்னால் உணர முடிகிறது. அநேகமானோர் ஒருவேளை உணவை உண்ண முடியாத நிலையில் இருக்கின்றனர்.

**கேள்வி :** கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை நாங்கள் உணர்கின்றோம். இருப்பினும் கடன்களை மீளச் செலுத்துதல் மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகிய தொடர்பில் சீனாவின் நிலைப்பாடு என்ன?

**பதில் :** சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் முடிவிற்கு வந்ததன் பின்னர் இது தொடர்பில் சீனாவுடன் பேச்சு நடத்தலாம் எனத் தீர்மானித்திருக்கின்றோம். அவர்களிடம் கடன் மறுசீரமைப்பதற்கான கோரிக்கையை முன்வைப்போம்.

**கேள்வி :** சீனாவிற்கு மீள செலுத்த வேண்டிய கடன் தொகை எவ்வளவு? இலங்கை சீனாவின் கடன் பொறிக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறதா?

**பதில் :** இல்லை. நாங்கள் கடன் பொறிக்குள் சிக்கவில்லை. சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களின் அளவு ஒரே அளவானவையாகவே உள்ளன. ஆனால் சீனாவின் கடன்களுக்கான வட்டி வீதம் சற்றே உயர்வாகக் காணப்படுகிறது. – என்றார்.

# சுகாதார சேவை ஊழியர்களின் கொடுப்பனவுகள் தன்னிச்சையான தீர்மானத்துக்கமையவே குறைப்பு!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

சுகாதார அமைச்சின் நிதி முகாமைத்துவ பணிப்பாளரின் தன்னிச்சையான தீர்மானத்துக்கமையவே வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

எனினும் அவ்வாறு எந்தவொரு பணிப்புரையும் தன்னால் வழங்கப்படவில்லை என்றும் , சுகாதார ஊழியர்கள் மாத்திரமின்றி எந்தவொரு அரச உத்தியோகத்தர்களின் கொடுப்பனவையும் மட்டுப்படுத்துமாறு ஆலோசனை வழங்கவில்லை என்றும் நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்

நாட்டிலுள்ள கடும் நெருக்கடியான சூழலுக்கு மத்தியிலும் சுகாதார ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர்.

எனினும் சுகாதார அமைச்சின் நிதி முகாமைத்துவ பணிப்பாளர் சுகாதார ஊழியர்களின் குறிப்பாக வைத்தியர்களுக்கான கொடுப்பனவுகளை மட்டுப்படுத்த அனுமதியளித்துள்ளார்.

இந்த நடவடிக்கை சுகாதாரத்துறையை மேலும் வீழ்ச்சியடைச் செய்யுமே தவிர ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டு செல்லாது.

இலவச சுகாதார சேவை பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக சுகாதாரத்துறையிலுள்ளவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உறுதியாகவுள்ளது.

இந்நிலையில் சுகாதார ஊழியர்களுக்கான கொடுப்பனவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் விசேட சந்திப்பில் ஈடுபட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட நிதி அமைச்சின் செயலாளர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும் என்று தான் பணிப்புரை விடுக்கவில்லை எனத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

எவ்வாறிருப்பினும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தற்போதுள்ள நிலைமையை மிகவும் வினைத்திறனான முறையில் முகாமைத்துவம் செய்ய வேண்டும் என்ற அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் சுகாதார அமைச்சின் நிதி முகாமைத்துவ பணிப்பாளரின் தன்னிச்சையான தீர்மானத்தால் வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதனால் பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். சுகாதார ஊழியர்களின் நலனைப் பாதிக்கும் எந்தவொரு செயற்பாடும் முன்னெடுக்கப்பட மாட்டாது என நிதி அமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

சுகாதாரத்துறைக்காக ஒதுக்கப்படும் நிதியில் எவ்வித மட்டுப்பாடுகளும் விதிக்கப்பட மாட்டாது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உறுதியளித்துள்ளார். இம்மாதம் குறைக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகள் மீள வழங்கப்படும் என்றும் அவர் எமக்கு உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஒரு வார காலத்துக்குள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும். –என்றார்.

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முக்கிய பணி பொருளாதாரமே தவிர அரசமைப்பு திருத்தமல்ல

## பெரமுன பொதுச்செயலாளர் சாகர எடுத்துரைப்பு



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பு திருத்தத்தை காட்டிலும்,பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான காரணிகள் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும்.

பொருளாதார முன்னேற்றத்துக்காகவே பொதுஜன பெரமுன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

21ஆவது திருத்தச்சட்டமூல வரைவுதொடர்பாகஅவதானத்துடன் உள்ளோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்ட மூலவரைவு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

எந்த நாட்டிலும் அரசமைப்பு ஒரு தனிநபரையோ அல்லது ஒரு குடும்பத்தையோ இலக்காகக் கொண்டு உருவாக்கப்படுவதில்லை.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் ஒரு தனி குடும்பத்தை இலக்காக கொண்டு உருவாக்கப்பட்டது. அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தைத் தற்போது புகழ்பாடும் அரசியல்வாதிகள் தான் கடந்த காலங்களில் 19 ஆவது திருத்தம் நாட்டின் சாபம் என விமர்சித்தார்கள்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் ரத்து செய்யப்பட்டு நடைமுறைக்கு சாத்தியப்படும் வகையில் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்படும் என பொதுஜன பெரமுன தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது.

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு,புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பல்வேறு காரணிகளால் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியை அரசாங்கத்துடன் ஒன்றிணைந்திருந்தவர்கள்அரசியல்நெருக்கடியாக மாற்றியமைத்து நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கினார்கள்.

பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொருளாதார மீட்சி மற்றும் சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பு திருத்தத்தை காட்டிலும்,பொருளாதார மீட்சி, நடைமுறை சமூக பிரச்சினைக்குத் தீர்வு காண அவதானம் செலுத்த வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டமூல வரைவு தொடர்பாக அதிக அவதானம்செலுத்திவருகிறோம். – என்றார்.

# ஆறு.திருமுருகனை வாழ்த்துவோம்!

## இன்று அவரது 61ஆவது பிறந்த தினம்

"பஞ்சம்படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி" – என்று எப்போதோ சொல்லிவைத்தார் யோகர் சுவாமிகள்.

அதனை இடைக்கிடையே அனுபவித்து மீண்டெழுந்து வாழ்பவர்கள் நம் தமிழ் மக்கள். அவர்களின் அந்த எழுச்சிக்கு உரமூட்டி ஆதர்ச புருஷர்களாக வாழ்பவர்கள் எம்மிடையே வாழும் பற்றற்றவர் சிலரே. அவர்களில் பெயர் சொல்லக்கூடிய பெருந்தகையாக இன்று வாழ்பவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்.



துர்க்கை அன்னையின் அரவணைப்பில் வளர்ந்து காவியுடுக்காத சன்னியாசியாக சமய சமூக தமிழ் இலக்கிய சேவை மட்டுமன்றி அவ்வப்போது தமிழ் மக்களின்நன்மைகருதிஅரசியல் அறத்தை மென்மையாக எடுத்தியம்பியும் பெரும் சேவை ஆற்றி வருபவர் ஆறு. திருமுருகன் எனின் மிகையாகாது.

திருமுருகனின் சேவையை வருடம் ஒரு தரமாவது பொது வெளியில் எடுத்தியம்புவது அவர்தம் சேவை மேம்படவும் ஆதரவுக் கரங்கள் தொடர்ந்தும் புதிதாகவும் நீள வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

திருமுருகன் என்றால் சிவபூமி. சிவபூமி யென்றால் திருமுருகன். சிவபூமி என்பது ஒரு சிறிய இடமல்ல குறுகிய வட்டமல்ல. அது எங் கும் பரந்து விழுதுவிட்டு கிளை பரப்பி நிற்கும் ஆலமரம்.

திருமுருகன் அவர்கள் துடிப்பு மிக்க ஓர் இளைஞனாக – ஒரு சிறந்த பேச்சாளனாக – நல்லாசிரியனாக – தொடங்கிய வாழ்க்கை இன்று ஒரு யோகியாக எண்ணியதை எண்ணியாங்கு இயற்றுவிக்கும் ஆற்றல் கொண்டவராக – உயர்ந்து நிற்கிறது.

அவர் ஒரு ஜமீந்தாரோ நிலச்சுவாந்தரோ தொழிலதிபரோ அல்லர். சுயநலமில்லா ஒரு செயல்வீரர். தொட்ட இடம் துலங்கும் கைகள் கொண்டவர். உலகெங்கும் பரந்துவாழும் சைவத் தமிழ் சமூக தொண்டர்களின் தாகம் தீர்க்கும் வழிகாட்டி. உலகம் சுற்றும் வாலிபனாக உரையாற்றிக்கொண்டு பணம் பகட்டு மாலை மரியாதை என காலத்தை ஓட்டிக் கொண்டு இருந்திருக்கலாம். ஆனால் அன்னை துர்க்கை அவரை நெறிப்படுத்தினாள். அவரது சேவை தன்னுள் முடங்கிவிடக்கூடாது என மடைதிறந்துவழிகாட்ட சிவபூமி பாடசாலை எனும் ஆலம்விதையை கோண்டாவிலில் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன் விதைத்தார் திருமுருகன்.

இன்று அவரது முயற்சி – அயரா உழைப்பு – நம்பி கைகொடுக்கும் அன்பர்கூட்டம். இருப்பவரிடம் உரிமையுடன் கைநீட்டி ஏற்கும் பண்பு – காரணமாக பரந்து வளர்ந்து நிற்கிறது. கிடைக்கும் நிதியைக் கொடுப்பவர் வியந்து நிற்கும் வகையில் செயற்படுத்திக் காட்டும் ஆற்றலான் திருமுருகனன்றி எவராலும் முடியாது.

நல்லூரான் எல்லார் மனதிலும் நிறைந்திருப்பதுபோல் திருமுருகன் செயற்பாடுகளும் விரிந்து நிற்கின்றன. எல்லார் மனதிலும் நிலைக்க வேண்டும் உள்ளார் மனதில் நினைக்க வேண்டும் என்பதற்காக ஒரு மீட்டல் பதிவை இட்டே ஆகவேண்டும். ஏதுமற்றவர் வாய்ச்சொல் தாரீர் என்பதற்கிணங்க என்பணி இதுவாகுவதாகுக.

சிவபூமி பாடசாலை ஒலிம்பிக்கில் புகழ் கண்டது. முதியோர் இல்லம் கீரிமலை அன்னதான மடம் நாவற்குழி திருவாசக அரண்மனை அருங்காட்சியகம், கந்தபுராண வளாகம், திருக்குறள் வளாகம், ஞான ஆச்சிரமம், கோகுலம், நாய்கள் காப்பகம், அபயம் இலவச வைத்திய ஆலோசனை நிலையம் அன்னபூரணி வயல், பஞ்சாமிர்த தோட்டம், செவ்விளநீர்த் தோட்டம், மூலிகைத்தோட்டம், யாழ் மாவட்டத்தை தாண்டி கிளிநொச்சியில் சிவபூமி பாடசாலை, திருகோணமலையில் சிவபூமி சமய அறநெறிபாடசாலை, யாத்திரீகர்மடம், மட்டக்களப்பில் 108 சிவலிங்க ஆலயம், மலைநாட்டில் சிவபூமி ஞாயிறு சமய பாடசாலை, மதிய போசன மடம், கொழும்பில் சிவபூமி சமய ஆராதனை நிலையம். இவை மட்டுமா காலந்தவறாது புற்றுநோயாளருக்கு மருந்து, சத்துணவு திட்டம், பல்கலை மாணவருக்கு கல்வி உதவி நிதி, வசதியற்றோருக்கு வீடமைப்பு, யாழ். பல்கலைப்பேரவையில் பங்குகொண்டு வளங்கள் தேடிக்கொடுத்தல், யாழ். போதனா வைத்தியசாலைக்கு வளங்கள் பெற்றுக்கொடுத்தல், தட்டுப்பாடு வரும்போது மருந்துகள் பெற்ற உதவி முட்டுக்கொடுத்தல் இப்படியே தானும் கனவு கண்டு கனவு காணும் வசதியான நல்ல உள்ளங்களின் கனவை நனவாக்கி செயலாற்றலாளர்.

இத்தனைக்கும் தானாக பணத்தைக் ஒரு போதும் கையாள்வதில்லை. சிவபூமி அறக்கொடை என்பதை சட்டத்தால் அங்கீகரித்து வர்த்தமானியில்பிரசுரித்துமூவர்கொண்ட நிதியம் ஏழ்வர் கொண்ட சபை என்பதை நிறுவி அழகாகச் செயற்படுத்துபவர். மருத்துவர் குகதாசன் திருமதி குகதாசன் அவர்கள் மூலம் நிதியை பக்குவமாகக் கையாண்டு வருடந்தோறும் முறைப்படி அங்கீகாரம் பெற்ற கணக்காய்வு நிறுவனமூலம் கணக்காய்வு செய்து பதிவு செய்து வைப்பவர். இதற்கு முன்னாக அன்னையின்வழி துர்க்கையின் பணிகள் சிறக்க தன்னை அர்ப்பணித்து ஆற்றும்பணி பெரும்பணியாளர்.

இதற்கு மேலாக இலங்கை இந்து மா மன்றத்தின் யாழ். அலுவலகத்துக்கு பொறுப்பாகவும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் வழிநடத்துநராகவும் ஆதீனம் சுவாமிகளுக்கு பக்கபல மாகவும் இருந்து சமய சமூக அரசியல் பங்க ளிப்புகளை நிதானமாகவும் சிறப்பாகவும் செயற் படுத்துபவர். இத்தனைக்கும் மத்தியில் தமிழ் மக்களுக்காக அவ்வப்போது நியாயத்தை எடுத்துரைத்து குரல் கொடுத்து நேர்மையை இயம்புவதும் அவர் சிறப்பு.

ஒரு நிகழ்வில் திருமுருகன் கலந்து கொண்டால் அந்நிகழ்வு தொடர்பான விடயங்களை விவரமாக சொல்லும் ஒரு வரலாற்று தகவல்பெட்டகம் அவர். கடந்தவருடம் அறுபதை நிறைவு செய்த அவர் அறுபத்தொன்று நிறைவான ஒரு வருடத்துள் கீரிமலை வயோதிபர் இல்லம் மற்றும் மேலே குறிப்பிட்ட மட்டக்களப்பு மலையக கொழும்பு பணிகள் செய்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது ஹவாய் ஆதீனம் தொண்டுநாதன் சுவாமிகளும் அவருடன் சேர்ந்து பயணிப்பது மேலும் பலன் பல தருவதாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அவரது பணிதொடர ஆதரவுக்கரங்கள் பெருக அவரது பிறந்தநாளில் வாழ்த்துவோம்.

நல்லூரான் அருளும் துர்க்கையின் அணைப்பும் அவர் சிறந்துவிளங்க பணியோங்க அருளட்டும் என வாழ்த்துவோம்.

ந.சதாசிவ ஐயர்
ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்.

# சைவத் தமிழுடன் எம்மவர் உயிர்காக்கும் பெருமகனார் கலாநிதி ஆறு. திருமுருகன்!

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஐயா அவர்களின் 61ஆவது பிறந்ததினம் இன்றாகும்.

இன்றைய இந்த நாளில் அவரின் சேவைகளை மீட்பது சாலப்பொருந்தும். ஈழத்து தற்கால நாவலர் என்று அவரைக் குறிப்பிடலாம். நாவலர் பெருமான் சைவத்தையும் தமிழையும் காப்பதற்காக அரும்பாடுபட்டார். இன்றைய புகழ்பூத்த சைவ பாரம்பரிய பாடசாலைகள் நாவலர் பெருமானால் உருவாக்கப்பட்டவையே. ஆனால் கலாநிதி ஆறு.திருமுருகன் ஐயா, அதற்கும் ஒருபடி மேலே சென்று சைவத்தையும் தமிழையும் வளர்க்க நாவலர் போன்று தன்னை அர்ப்பணித்ததுடன், நொய்ந்துபோயுள்ள எமது சமூகத்தின் ஆரோக்கியமான வாழ்வுக்கும் தடுமாறும் அரசியல் தலைமைகளை சீர்செய்வதற்கும் என பல்கோணங்களில் சேவையாற்றுகின்றார். நாட்டின் தற்போதைய இக்கட்டானநிலையில் சத்திரசிகிச்சைகளுக்கு போதிய மருத்துவ வசதிகள் இன்மை, புற்றுநோயாளர்களுக்கான மருத்துவ வசதியின்மை என வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் ஆறு.திருமுருகனை நாடுமிடத்து, அவற்றுக்கெல்லாம் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து பல உயிர்களை வாழவைத்துள்ளார்.

“ஞாயிறைச் சங்கிலியால் அளக்கலாமோ
ஞானகுருவின் புகழை நாம் வகுக்கலாமோ?’
ஆயிரம் நூல் எழுதிடினும் முடிவுறாதாம்
ஐயனவன் பெருமையை நான் சுருக்கிச் சொல்வேன்”.

கலாநிதி ஆறு.திருமுருகன் ஐயா அவர்கள் நல் மாணாகர் பலரை உருவாக்குகின்ற ஆசிரியப் பணியில் தன்னை இணைத்து, சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்ற ஒரு நல்லாசானாகச் செயற்பட்டார். அந்தக் காலத்தில் கம்பன் கழகம் ஊடாக மதிப்புமிக்க கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களுடன் இணைந்து ஆன்மீகச் சொற்பொழிவு, பட்டிமன்றம் என்று சைவத்தையும் தமிழையும் வளர்த்தமையால் ஈழமணித் திருநாட்டின் அனைத்து மக்களாலும் நன்கு அறியப்பட்டார். தன் அறிவு ஊடாக ஆலயங்கள் தோறும் பெருந்திருவிழாக்களில் ஆன்மீகச் சொற்பொழிவு 12 நாள்களும் நிகழ்த்துவதற்கு ஆலய உபயகாரர் நிதி உதவி வழங்கினால், அவர் அந்த நிதியை திருநெல்வேலி முத்துத் தம்பி அநாதை இல்லம் போன்ற ஆதரவற்றோர் இல்லங்களுக்கு வழங்குமாறு அவர்களிடம் தெரிவிப்பார். சில ஆலயங்களுக்கு ஒரு மூடை அரிசியை அந்த அநாதைப் பிள்ளைகள் வளரும் இல்லங்களுக்கு வழங்கும்படி கூறுவார். இவரது ஆன்மீக சொற்பொழிவு கேட்பதாயின் எனக்கு அலாதிப் பிரியம். ஒருமுறை அளவெட்டி கும்பளாவளை ஆலயத்தில் ஐயாவின் ஆன்மீக உரை. நான் அங்கு அறிவுத்தேடலுக்காகச் சென்றிருந்தேன். அந்த ஆலய நிர்வாகசபைத் தலைவர் முன்னாள் நீதிபதி விகடகவி திருநாவுக்கரசு ஐயா(தற்போது அமரர்). அவர் அங்கு இவரது சொற்பொழிவு ஆரம்பமாவதற்கு முன் அறிமுக உரையில் குறிப்பிடுகையில், இவர் ஆறு.திருமுருகன் என்று கூறுவதிலும் பார்க்க, இவரை ‘அரிசித் திருமுருகன்’ என்று அடைமொழி வழங்குவதே சாலப் பொருந்தும். – என்றார்.

திருஞானசம்பந்தா வித்தியாலயத்தில் இவர் கற்பிக்கின்ற காலத்தில், அந்தப் பாடசாலையில் கிணற்றில் இவர் இறங்கி சுத்தம் செய்தார். அந்தநேரத்தில் கல்விப்பணிப்பாளருடனான அணியினர் பாடசாலையைப் பார்வையிட வருகைதந்தார்கள். கிணற்றை யார் சுத்தம் செய்கிறார் என்று அதிபரிடம் கேட்டபோது, புதிதாக வந்த ஆசிரியர் ஆறு.திருமுருகன் என்றார் அதிபர். அந்த வருடம் அவருக்கு நல்லாசிரியர் விருது கிடைத்தது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் புகழ்பூத்த அதிபர் விக்னேஸ்வரன் அதிபராக இருந்தார். சுன்னாகம் கொத்தணி அதிபராகவும் அவரே திகழ்ந்தார். ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு ஆறு.திருமுருகன் கல்வி கற்பிப்பதை அறிந்த அதிபர் விக்னேஸ்வரன், ஆறு.திருமுருகனின் ஆளுமை, அறிவு, கற்பிக்கும் திறன் என்பவற்றை உணர்ந்தவராகி, அவரை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு ஆசிரியராக்கி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இந்துநாகரிகம் கற்பிக்கச் செய்தார். ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அவர் பட்டிமன்ற அணியை உருவாக்கி எத்தனையோ மாணவர்களை எழுத்தாளர்களாகவும், பேச்சாளர்களாகவும் உருவாக்கினார்.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தை திறம்பட நிர்வகித்து அன்னையின் ஆசியால் அருளாட்சிபுரிந்து கொண்டிருந்த துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார், ஆறு.திருமுருகன் ஐயாவை தேவஸ்தான நிர்வாக சபையில் இணைத்தார். 2008 ஆம் ஆண்டு அம்மாவின் மறைவுக்குப் பின்னர் துர்க்காதேவியின் அருளாசியால் ஆலயத்தை நிர்வகிக்கின்ற பொறுப்பும் – பெரும் வாய்ப்பும் – இவருக்குக் கிடைத்தது.

2012 ஆம் ஆண்டு தனது 50 ஆவது அகவையில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அதிபராக இருந்தவர் அந்தப் பணியைத் துறந்து சைவத்துக்கும், தமிழுக்கும் தன்னை முழுமையாக ஒப்படைத்தார். இந்த மண்ணில் நல்லைநகர் நாவலருக்குப் பிறகு சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெருமகன் என்ற பேறு ஆறு.திருமுகன் ஐயா பெற்றார். இவரால் –



‘மூவா இளமையும் காட்டி முதுமை அழகுங் காட்டி காலந்தோறும் சிறந்துநிற்கும் ஒப்பற்ற மதமாம் இந்து மதம்.’ இந்த இந்துமதத்தின் அடிநாதமாக ஈழத்தின் வடபகுதி யாழ்ப்பாணக் குடாநாடு சைவப் பாரம்பரியத்துடன் வரலாற்றுப் பிரசித்திபெற்று விளங்கிற்று. ஆறுமுகநாவலரால் ஈழத்தைச் ‘சிவபூமி’ என்று அழைக்கப்பட்ட பெருமையும் இந்த மண்ணுக்குண்டு.

நான்குபுறமும் கடலால் சூழப்பட்டு, அந்தக் கடற்கரையில் ஓங்கியெழுகின்ற பேரலைகள் அதன் கரையினை முத்தமிட்டு வெண்ணிறநுரை பரப்புகின்ற அழகிய சிறப்புமிகு பெருமை கீரிமலைக்குண்டு. நகுலகிரி முனிவரின் கீரிமுகம் நீங்கப்பெற்றமலையால் ‘கீரிமலை’ என இந்தப் பிரதேசம் பெயர்பெற்றதாக இதிகாச வரலாறுகள் சான்று பகர்கின்றன. வடக்கில் பிதிர்க்கடன் செலுத்தும் புனித தீர்த்தக்கரை இங்கு அமைந்துள்ளது. கீரிமலை, கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் பகுதிகளை இணைத்து ‘கோவிற்கடவை’ என்றொரு பெயரும் முன்னொரு காலத்தில் இருந்ததாகவும் புராண இதிகாச வரலாறுகள் கூறுகின்றன.

கீரிலை பிரதேசத்துக்குள் கால்பதித்தாலே சிவ உணர்வு எம் எம் சிந்தையில் பதியும். இந்தக் கிராமத்தின் பிரசித்திபெற்ற ஆலயங்களாக நகுலேச்சரம், கடற்கரைச் சித்தி விநாயகர் கோயில், மாரியம்மன் கோயில், குழந்தைவேற்சமாதிச் சிவாலயம், சுப்பிரமணியர் ஆலயம், காசி விசுவநாதர் கோயில் என்ற ஆலயங்களும் கிழக்கு எல்லையில் மாவிட்டபுரம் என்ற பிரசித்திமிக்க ஆலயமும் உள்ளன. வடக்கில் பாக்குநீரிணைக் கடல் உள்ளது.

இங்கு பிதிர்க்கடன் செலுத்த வருவோரும், தம் குறை களைய சிவனை நாடி வரும் அடியார்களுக்கு அவர்கள் வயிறாறி, இளைப்பாறிச் செல்ல நகுலேஸ்வரர் ஆலயச் சூழலில் கடற்கரைக்கு அருகில் சிறாப்பர் மடம், வைத்தியலிங்கம் மடம், கிருஷ்ணபிள்ளை மடம், பிள்ளையார்கோயில் மடம், நாராயணபூடர் புண்ணிய தரும மடம், துறவிகளாச்சிரமம் என ஆறு மடங்கள் சிறப்புற அமைந்துள்ளன.

துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்ட யுத்தப் பாதிப்புக்களால் இந்த மடங்கள் முழுமையுமாக அழிவுற்றன. எமது வரலாற்றுச் சின்னங்கள் அழிந்தன. ஈழத்து பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரர் ஆலயமும் பாரிய அழிவை எதிர்கொண்டது. யுத்தம் நிறைவடைந்தபின் பிதிர்க்கடன் செலுத்துவதற்காக கீரிமலைக்குச் செல்வோர் இளைப்பாற ஓர் இடமின்றிப் பெரிதும் தவித்தார்கள். சிரமப்பட்டார்கள். சிவனிடம் நொந்து, மெய்யுருகித் தமது குறைகளை ஒப்புவித்தார்கள். இலங்கையின் ஆட்சி மதம் அங்கு கோலோச்ச முற்பட்டது. கதிர்காமத்தைப் போன்ற நிலைமை கீரிமலையிலும் ஏற்படுமோ என்று சைவ மக்கள் ஏங்கித் தவித்தார்கன். பாரம்பரிய சைவ வரலாறு திரிவுபடுத்தப்படுமோ என்ற அச்சம் இந்துக்கள் மனதில் ஆழ வேரோடியது. பெரும்பான்மை ஆட்சியாளர்கள் கீரிமலையை புனிதப் பிரதேசமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பிரகடனப்படுத்தி, ‘சிவாய நம ஓம்’ என்று கடல் அலைகள் வரை உச்சாடனம் செய்த அந்தப் பிரதேசத்தில் ‘பிரித்’ ஓதுகின்ற இடமாக மாற்ற முனைந்தார்கள்.

இந்த நிலையில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் காலடியில் பிறந்து வெறும் 32 வருடங்கள் வாழ்ந்த ஆதிசங்கராச்சாரியார் பூரி, காஞ்சி, சிறுங்கேரி, துவாரகை ஆகிய இடங்களில் நான்கு மடங்களை நிறுவி, 6 மதங்கள் நிறுவி, 10 உபநிடதங்களுக்கு உரை எழுதி, சிவன்மீது சிவானந்த லகரி, சக்திமீது சௌந்தர்ய லகரி, விஷ்ணு மீது பஜ கோவிந்தம், முருகன் மீது ஸ்ரீ சுப்ரமன்ய புஜங்கம், விநாயகர் மீது கணேச பஞ்சாட்சரம் பாடி சாதாரண மனிதர்களால் சாதிக்கமுடியாத சாதனைகளையும் போதனைகளையும் ஆற்றி சைவத்தைக் காத்தமை போன்று, ஆதிசங்கரர் போன்று ஈழத்தில் அவதரித்து, கீரிமலையின் இந்த அவலநிலையைக் கண்ணுற்ற கலாநிதி ஆறு.திருமுருகன் ஐயா பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் எதிர்நீச்சலிட்டு, தனது நண்பர் – ஜனாதிபதி சட்டத்தரணி அமரர் நீலகண்டனின் துணையுடன் 2012 ஆம் ஆண்டு கீரிமலையில் ஓய்வுநிலை ஆசிரியர் அமரர் விஸ்வநாதன் குடும்பத்தினரால் வழங்கப்பட்ட காணியில் சைவமணம் பரப்பும் சிவபூமி மடத்தை 4 மாத கட்டுமானப் பணிகளுடன் பிரமாண்டமாக நிறுவினார். பிறமதப் பிரசன்னத்தைத் தகர்த்தார். அதன்பின் யாத்திரிகர் விடுதியை உருவாக்கினார். தற்போது வயோதிபர் இல்லமும் அங்கு நிறுவப்பட்டு, இன்று அந்தப் பிரதேசம் சைவ மணங்கமழும் புண்ணிய சைவபூமியாக உருவாக்கினார்.

அந்த சிவபூமி மடத்தின் ஊடாக ஞாயிறு பௌர்ணமி குருபூசை நாள்களின் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் சமய நிறுவனங்கள் யாத்திரையாக வரும் போது தங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. சிவலிங்கப்பெருமான் நடராசப்பெருமான் மடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு தினமும் உணவு படைத்து வழிபாடு நடைபெற்றுவருகின்றது.

அந்தியேட்டி கிரியை செய்யவரும் தூர இடத்து அன்பர்கள் ஆறுதல்பெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

தற்போது, அங்கு அழிவடைந்த கிருஷ்ணபிள்ளை மடம் இருந்த இடத்தை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் அமரர் கிருஷ்ணபிள்ளையின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட 19 பரப்புக் காணியில் ஆதரவற்ற – பிள்ளைகளால் கைவிடப்பட்ட – முதியவர்களுக்காக முதியோர் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. எத்தனையோ எழுத்தாளர்கள், கல்விமான்கள் கூட வாழும்போது பெருமையுடன் வாழ்ந்தவர்கள் முதுமையில் அநாதரவாக ஆதரவற்றுத் தவிக்கின்ற நிலைமையில் அவர்களின் ஆதரவுக்கு கரம் கொடுப்பதற்காக – அவதியுறும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பெரியவர்களுக்காக – இந்த முதியோர் இல்லம் கீரிமலையில் அமைந்துள்ளது. சுழிபுரத்திலும் சிவபூமி முதியோர் இல்லம் 78 முதியவர்களுடன் சிறப்பாக சேவையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. தற்போது கோவிட்கடவையின் அடுத்த பதியாகிய மாவிட்டபுரத்தில் திருக்குறள் அரண்மனை நிறுவும் வேலைகள் நடைபெறுகின்றன.

நான் ஆரம்பத்தில் ஆதிசங்கரவை உவமயித்தமை போன்று குறுகிய வட்டத்தில் கலாநிதி ஆறு.திருமுருகன் நின்றுவிடாமல் அவரால் கீரிமலை சிவபூமி மடம், கீரிமலை யாத்திரிகர் விடுதி, சிவபூமி முதியோர் இல்லம், கோண்டாவில் மனவிருத்திப் பாடசாலை, கிளிநொச்சி மனவிருத்திப் பாடசாலை, நாவற்குழி அரும்பொருட் காட்சியகம், குப்பிளான் ஞான ஆச்சிரமம், மயிலிட்டி ஞான ஆச்சிரமம், இயக்கச்சி நாய்களின் சரணாலயம், நாவற்குழி திருவாசக அரண்மனை, திருகோணமலை மனவிருத்திப் பாடசாலை, சிவபூமி திருமூலர் மூலிகைத் தோட்டம், சிவபூமி கலைக்களஞ்சியம், சிவபூமி கல்வி நிதியம், சிவபூமி வாழ்வாதார நிதியம், சிவபூமி மருத்துவ நிதியம், ஆனைக்கோட்டை அபயம் வைத்தியசாலை, சுன்னாகம் சிவபூமி வைத்தியசாலை, சிவபூமி தொழிற்பயிற்சி நிறுவனம் என்பன நிர்வகிக்கப்படுகின்றன.

இவ்வாறு அளப்பெரும்சைவத்தமிழ்பணியாற்றும் கலாநிதி ஆறு.திருமுருகன் ஐயா அவர்கள் நூறாண்டுகள் பல கண்டு நீடு வாழவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தெல்லியூர் லயன் சி.ஹறிகரன்
(அவரது மாணவன்)
உறுப்பினர்,
வலி.வடக்கு பிரதேசசபை

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**




**1. கேள்வி:-** அண்மைக் காலமாக உங்களுக்கு எரிச்சலூட்டுகிற ஏதாவது ஒரு விடயம் பற்றிச் சொல்லுங்களேன்.

**பதில்:-** ஒரு விடயம் என்ன ஒரு விடயம்? அரசியலிலிருந்து, ஆன்மீகம் வரை நூறு விடயங்களைக் கூடச் சொல்லலாம். நீங்கள் ஒரு விடயம் என்று கேட்டபடியால் என் மனதில் தொடர்ந்து எரிச்சலைத் தந்து கொண்டிருக்கும் ஒரு விடயத்தை மட்டும் இங்கு சொல்கிறேன்.

தமிழ்நாட்டின் தொலைக்காட்சி மற்றும் YouTube முதலியவற்றில் நிகழ்த்தப்படும் கலந்துரையாடல்களிலும், பேட்டிகளிலும் தொடர்ந்து ஓர் அநியாயம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சிகளை, நடுவர்களாய் அல்லது இணைப்பாளர்களாய் இருந்து நடத்துகிறவர்களில் பெரும்பாலானோர் இன்றைய உலகின் அறிவியல் மற்றும் புரட்சிக்கருத்துக்களை மட்டும் உள்வாங்கி விழுங்கிக் கொண்டு, பாரம்பரியமான எமது தமிழ், சமயப் பண்பாடுகள் மீதான நம்பிக்கைகளை இழிவு செய்யும் மனப்பாங்கு உடையவர்களாகவே இருக்கிறார்கள்.

ஏதோ இரண்டு பக்கக் கருத்துக்களையும் கேட்டு நடுநிலை வகிப்பவர்கள் போல, எதிர்க் கருத்துள்ள இரண்டு குழுக்களை அமைத்து, விவாதங்களைத் தொடக்கி வைக்கும் இவர்கள், நிகழ்ச்சியின் உட்சென்றதும் நவீன கருத்துக்காரர்களோடு தாமும் சேர்ந்து நின்று, மரபு, ஐதீகம் சார்ந்த விடயங்கள் சொல்வோரை, தாமும் இழிவு செய்து, எதிராளிகளுக்கும் இழிவு செய்ய இடமேற்படுத்திக் கொடுக்கிறார்கள். பெரும்பாலும் கடவுள் மறுப்புக் கொள்கை, பெண் விடுதலை போன்ற நவீன கருத்துக்களின் அணியில் இந்நிகழ்ச்சிகளில் பேச வருவோர், ஆங்கிலப் புலமையோடும், விஞ்ஞான அறிவோடும் இருப்பதால் அவர்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு, அவ்வாற்றல்கள் இல்லாமல் வாதத்திற்கு வருகின்ற மரபு சார்ந்தோரை இவர்கள் இழிவு செய்வதைப் பார்க்க உண்டாகும் எரிச்சலில் மண்டை வெடித்து விடாதா? என்று இருக்கிறது.

இவர்கள் அந்த நிகழ்ச்சிகளை இப்படித்தான் நடத்துவார்கள் என்பது பலதரம் நிரூபணமாகிவிட்டது. ஆனாலும் தொலைக்காட்சியில் முகம் காட்டலாம் எனும் ஒரே நப்பாசைக்காக, மரபு மற்றும் ஐதீகக் கருத்துக்களைச் சொல்ல வருவோர், எதிராளிகளின் ஆங்கில, விஞ்ஞான ஆற்றல்களைக் கண்டு கொஞ்சம் பயந்து போய், முட்டாள்தனமாக ஏதேதோ பேசி, எதிராளிகளிடம் வீணாக அவமரியாதைப்படுவதைக் காணுகிற பொழுது ஏற்படுகிற எரிச்சல் அதைவிட அதிகமானது.

நவீனகாரர்கள் பேசுகிற பொழுது கூர்ந்து அதைக் கேட்பதும் ஆமோதிப்பதுமாய் இருந்துவிட்டு, பின்னர் இந்த மரபு சார் குழுக்கள் பேசுகிற பொழுது அதை நக்கல் சிரிப்போடும், கிண்டல் தொனியோடும் எதிர்கொண்டு, புதுமைக்காரர்களை ஊக்கப்படுத்தி மகிழும், நிகழ்ச்சி நடத்துவோரைக் 'கழுவேற்றலாம்' போல் தோன்றுகிறது.

இவ்வளவுக்கும் நிகழ்ச்சியை நடத்துபவர்கள் ஒன்றும் பேரறிஞர்கள் அல்லர். அவர்கள் தம் வெற்றிக்கு இரண்டு காரணங்களை அடிப்படையாய் அமைத்துக் கொள்கிறார்கள். ஒன்று, பழமை சார்ந்த விடயங்களைப் பேச ஆழமானவர்களை அவர்கள் அழைப்பதில்லை. அழைத்தாலும் அத்தகையோரைக் குறுக்கிட்டுக் குறுக்கிட்டு அதிகம் பேச விடுவதில்லை. தொலைக்காட்சியில் முகம் காட்டும் விடயம் புதிதாய் இருப்பதால், விவாதிக்க வரும் அந்த மரபுக்காரர்களும் இவர்களின் மிரட்டலுக்கு ஆட்பட்டுப் பணிந்து போய்விடுகிறார்கள். அடுத்தது editing எனும் ஆயுதத்தை இவர்கள் தம் கையில் வைத்துக் கொண்டு தாம் மடக்கப்படுகிற இடங்களையெல்லாம் வெட்டி நீக்கி, தாம் மடக்கிய இடங்களை மட்டும் ஒளிபரப்பித் தம்மை 'ஹீரோக்களாகக்' காட்டிக் கொள்கிறார்கள்.

இத்தகையோரின் அட்டூழியங்களைக் கண்டு ஏற்படுகின்ற எரிச்சலைக் கூட சகித்துவிடலாம். இவர்கள் என்ன செய்வார்கள் என்பதைத் தெரிந்து கொண்டே, வீணாக நிகழ்ச்சிக்குப் போய் கழுத்தைக் கொடுத்து வெட்டுப்படுகிற அப்பாவிகளைக் காணுகிற பொழுது ஏற்படும் எரிச்சலைத்தான் சகிக்கமுடியவில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அங்க, தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரனுங்கோ.**

**2. கேள்வி:-** வழக்கமாக டான் ரி.வி 'ஸ்பொட்லைற்' பேட்டிகள் பற்றி அபிப்பிராயம் சொல்வீர்கள். கடைசியாக நடந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனின் பேட்டி கேட்டீர்களா? அதுபற்றி உங்கள் அபிப்பிராயம்?

**பதில்:-** என்னத்தைச் சொல்ல? தோட்டா இல்லாமல் வெற்றுத் துப்பாக்கியைக் கையில் வைத்திருப்பவன் எதிராளியைக் கண்டு பதற்றப்படுவான். அதுபோல, துணிந்து சொல்லத்தக்க நடைமுறைச் சாத்தியமான கொள்கைகள் கைவசம் இல்லாததால், கஜேந்திரனும் பேட்டியின் ஆரம்பத்திலிருந்து முடியும் வரை பதற்றத்துடனேயே இருந்தார். தன் கட்சியின் கொள்கைகள் பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எதிர்க்கட்சிகள் மீதான குற்றச்சாட்டுகளையே பதிலாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அவரது துப்பாக்கியில் தோட்டா இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு பேட்டியாளர்கள் திரும்பத் திரும்ப 'சுடு பார்க்கலாம், சுடு பார்க்கலாம்' என்பது போலத் தம் கேள்விகளால் அவரைச் சீண்டிக் கொண்டே இருந்தார்கள். கூட்டமைப்பின் சம்பந்தரும், முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் ஒற்றை ஆட்சிக்குள் தமிழினத்தைச் சிக்க வைக்கப் பார்க்கிறார்கள் என்ற ஒப்பாரியை அலுக்காமல் பாடிக் கொண்டிருந்தார் அவர். சமஷ்டி முறைக்குள் சுயாட்சி பெறுவதுவே தமது கொள்கை என்றவர் அதனை அடையும் வழியைக் கேட்ட பொழுது பதில் சொல்ல முடியாமல் திக்குமுக்காடினார். மக்களை ஒன்று திரட்டிப் போராடுவதுதான் தமது நோக்கம் என்று அடித்துச் சொன்னார். அதுதான் நோக்கம் என்றால், பின்னர் ஏன் நாடாளுமன்றத்திற்குள் இருந்து காலத்தை வீணாக ஓட்டுகிறீர்கள்? பதவிகளைத் துறந்துவிட்டு வெளியிலே வந்து அந்தக் காரியத்தைச் செய்யலாமே? என்று பேட்டியாளர்கள் கேட்காததால் தப்பித்தார். நம் மக்களின் வளர்ச்சிக்கான உங்களது பொருளாதாரத் திட்டம் என்ன? என்ற கேள்விக்குப் பதில் சொல்லாமல், முடிந்த அளவு சமாளிக்கப் பார்த்து அசைக்க முடியாமல் பேட்டியாளர்கள் 'கட்டை இறுக்கியதும்' அப்பாவித்தனமாக விவசாய முயற்சிகளில் ஈடுபடுவோர்க்கு போட்டிகள் வைத்துப் பரிசளிக்கிறோம் என்று அவர் சொன்ன பதிலுக்கு, இந்த ஆண்டின் சிறந்த நகைச்சுவைக்கான பரிசு வழங்கலாம். துப்பாக்கியில் தோட்டா இல்லை என்றால் போர் முகத்திற்குப் போகாமல் இருப்பது நல்லது என்பது கூட இவர்களில் பலருக்குத் தெரியவில்லை

பிற்குறிப்பு :- புதிதாய் அறிமுகப்படுத்தப்பட்ட பேட்டியாளர் இன்னும் நிறையத் தேர்ச்சி பெறவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'ஸ்பொட்லைற்' மற்றவர்களுக்கு வெளிச்சம் காட்ட, வாரிதியார் 'ஸ்பொட்லைற்றுக்கு' வெளிச்சம் காட்டுகிறார் போல.**

**3. கேள்வி:-** முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களைக் குற்றம் சாட்டி தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா அளித்த குமுறல் அறிக்கையைக் கேட்டீர்களா?

**பதில்:-** நியாயபூர்வமான தனது கொதிப்பைக் கொட்டித் தீர்த்திருந்தார். கூட்டமைப்பின் அலட்சியப் போக்கைத் தாங்காமல் மு.முதலமைச்சரை நம்பி வெளிவந்தவர்கள் அவர்கள். இங்கும் அதே கதி நிகழ்ந்தால் யாருக்குத்தான் கோபம் வராது? நம் போராட்ட வரலாற்றோடு பல காலமாய்த் தொடர்பில் இருப்பவர் ஸ்ரீகாந்தா. எதையும் நேர்படப் பேசும் அவரது துணிவை நான் இரசிப்பது உண்டு. அக்காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எழுச்சியின் உச்சத்தில் இருந்தபோது (அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராய் இருந்த காலத்தில்) யாழ் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்'தேவன்' தலைமையில் நடந்த ஒரு வழக்காடு மன்றத்தில் கூட்டணித் தலைவர்களைக் குற்றம்சாட்டி, பத்திரிகை ஆதாரங்களைத் தூக்கிப் போட்டுப் போட்டு (கூட்டணித் தலைவர்கள் முன்வரிசையில் இருக்கத்தக்கதாக) அவர் செய்த வாதம் கண்டு மயங்கி இருக்கிறேன். அந்தத் துணிவு வயதான பின்பும் இன்றும் இருப்பதை அந்த அறிக்கை காட்டியது. முன்னாள் முதலமைச்சரை நம்பிப் பின்னால் சென்றவர்களின் நிலை 'அரசனை நம்பிப் புருனைக்





கைவிட்ட'நிலைதான். ஆண்மை இருந்ததால் ஸ்ரீகாந்தா, நீதிபதியின் நீதியில்லாச் செயற்பாட்டைத் துணிந்து கண்டித்திருக்கிறார். அங்கு போன மற்றவர்களுக்கு முதுகெலும்பு நிமிர இன்னும் சில காலம் பிடிக்கும் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் *வாரிதியார் ஸ்ரீகாந்தாவைப் பாராட்டுகிறாரா? கூட இருக்கும் மற்றவர்களைக் கிளப்பி விடுகிறாரா? - நாரதர் வேலை!**

**4. கேள்வி:-** ஒகஸ்ட் மாத மத்தியில் நம் நாட்டு மக்கள் பட்டினியைச் சந்திக்க தயாராகவேண்டும் என்று புதிய பிரதமர் ரணில் சொல்கிறாரே.

**பதில் :-** யதார்த்தத்தைப் பேசுகிறார் என்ற அளவில் அவரைப் பாராட்டலாம். ஆனால் ஒன்று, இதைச் சொல்லத்தான் புதிய பிரதமராய்ப் பொறுப்பேற்று இவர் வந்தாரா? என்று கேட்கத் தோன்றுகிறது. ஏதோ பாஞ்சாலிக்குத் துகில் தர வந்த கண்ணன் போலத் தன்னைக் காட்டிவிட்டு, ஒகஸ்டில் சீலை அவிழ்ந்து விடும், அடுத்த மார்ச் அளவில் வேறு சீலை தந்து விடுவேன் என்று பேசுவதெல்லாம் பொறுப்புள்ள ஒரு பிரதமரின் பேச்சாய்த் தெரியவில்லை. அவர் சொல்லியிருக்கும் 'பட்டினியை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்!' என்பதற்கான அர்த்தம் புரியவில்லை. நாட்டு மக்களை வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக் கொள்ளும்படி சொல்கிறாரா அவர்? நல்ல வேடிக்கை தான் இது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஓடோடி வந்தாராம் அண்ணர் ஒன்றுமில்லை என்றாராம் பின்னர். ஹி..ஹி..**

**5. கேள்வி:-** எரிபொருள் நிலையங்களில் நடக்கும் சண்டைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசியப் பற்றாளர் சபேசனின் 2 ஆம் ஆண்டு நினைவேந்தல் நாளை



- முருகபூபதி -

எழுத்தாளர் – ஊடகவியலாளர் – தமிழ்த் தேசிய பற்றாளர் சண்முகம் சபேசன் ஆஸ்திரேலியா மெல்பனில் மறைந்து நாளை மே 29 ஆம் திகதியுடன் இரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனை முன்னிட்டு, நாளைய தினம் மெய்நிகரில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

ஆஸ்திரேலியா, கன்பரா தமிழ் அரங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த மெய்நிகர் அரங்கில் மூத்த ஊடகவியலாளர் திரு. இரா. சத்தியநாதன் ‘ஏட்டுச்சுவடி முதல் எண்ணிம ஊடகங்கள் வரையில்…’ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.




சண்முகம் சபேசன் யாழ்ப்பாணம், நீராவியடியில் 1954 ஆம் ஆண்டு பிறந்தவர். யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவரான சபேசன், ஆஸ்திரேலியா மெல்பனுக்கு புலம்பெயர்ந்து வந்தபின்னர், விக்ரோரியா ஈழத்தமிழ்ச்சங்கம், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முதலானவற்றில் அங்கம் வகித்தவாறு, மெல்பன் 3CR தமிழ்க்குரல் வானொலியில் கால் நூற்றாண்டு காலம் ஊடகவியலாளராகவும் எழுத்தாளராகவும் இயங்கிய தமிழ்த் தேசிய பற்றாளர்.

3CR தமிழ்க்குரல் வானொலியில் தங்கு தடையின்றி, வாரம்தோறும் அரசியல் விமர்சன கட்டுரைகளை எழுதி தனது குரலிலேயே ஒலிபரப்பினார். அவ்வாறு எழுதி ஒலிபரப்பிய ஆக்கங்கள் நூற்றுக்கணக்கானவை. ஆஸ்திரேலியாவில் 1989 ஆம் ஆண்டு முதல் வாழ்ந்தவர். அற்பாயுளில் கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி மெல்பனிலேயே மறைந்துவிட்டார்.

‘காற்றில் தவழ்ந்த சிந்தனைகள்’ – என்ற தலைப்பில் சபேசனின் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூலை அன்னாரது மனைவி திருமதி சிவமலர் சபேசன் கடந்த மார்ச் மாதம் மெல்பனில் வெளியிட்டார்.

சபேசனின் வானொலி ஊடகத்துறை எழுத்து மற்றும் தமிழ்த்தேசியம் சார்ந்த பணிகளை நினைவு கூர்வதற்காக நாளைய தினம் மெய்நிகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வு தாமோ. பிரமேந்திரனின் வரவேற்புரையுடனும் எழுத்தாளர் முருகபூபதியின் தொடக்கவுரையுடனும் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில் நினைவுப் பேருரையாற்றவிருக்கும் மூத்த ஊடகவியலாளர் இரா.சத்யநாதன் சுமார் அரை நூற்றாண்டு காலம் ஊடகத்துறையில், குறிப்பாக வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியனவற்றில் தொடர்புடையவர் .

ஆரம்பத்தில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன கல்விச்சேவையில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக 1974 இல் இணைந்திருக்கும் சத்தியநாதன், பின்பு அந்த முழுநேரப்பணியுடன் தமிழ் சேவையில் அறிவிப்பளராகவும், நேர்முக வர்ணனையாளராகவும் பிரதான அரச நிகழ்ச்சிகளில் (ஜனாதிபதியின் ஆங்கில மற்றும் சிங்கள உரைகளை) மொழிபெயர்ப்பை தமிழ் சேவைக்கு சமகாலத்தில் வழங்குபவராகவும் பணியாற்றியவர்.

வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பிலும் மலேஷியாவிலுள்ள Asian Institute for Broadcasting (UNESCO) நிறுவனத்திலும் பின்னர் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பில் ஜப்பானிலுள்ள, லண்டன் BBC ஒலிபரப்பிற்கு நிகரான, NHK நிலையத்தில் ஆறு மாதங்களும் பயிற்சி பெற்றவர்.

அதன்பின்னர், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளராக நியமனம் பெற்றார்.

சத்தியநாதன், அவுஸ்திரேலியா வந்த சில வருடங்களில் ‘தமிழ்முழக்கம்’ வானொலியில் உலகச்செய்திகளைப் பல ஆண்டுகள் தொகுத்து வழங்கிமையோடு, இன்பத்தமிழ்ஒலி நிலையம் சார்ந்த ஒலிபரப்பில் பிற்பகல் செய்திகள், உலகச் செய்திகள், Current affairs என்ற சமகால நிகழ்வுகள், அரசியல் சார்ந்த கலந்துரையாடல்கள் என்பவற்றில் பங்கேற்றவர்.

கடந்த சுமார் இருபது வருடகாலமாக ஆஸ்திரேலியா அரச ஊடகமான SBS தமிழ் ஒலிபரப்பில் அரசியல், தொழில்நுட்பம், விஞ்ஞானம், பொருளாதாரம் முதலான எண்ணற்ற தலைப்புகளில் வாராந்தம் நிகழ்ச்சிகளை படைத்து வருகின்றார்.









நாளைய நிகழ்வின் இறுதியில் திருமதி சிவமலர் சபேசன் நன்றியுரை நிகழ்த்துவார்.

எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், இதழாளர்கள் மற்றும் அன்பர்கள் அனைவரையும் இந்த மெய்நிகர் அரங்கில் இணைந்துகொள்ளுமாறு தமிழ் அரங்கம் அன்புடன் அழைக்கின்றது.

மெய்நிகர் இணைப்பு:

நாளை : 29 – 05 – 2022 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: ஆஸ்திரேலியா : இரவு 7 – 00 மணி

இலங்கை – இந்தியா: மாலை 2 – 30 மணி

இங்கிலாந்து : காலை 10 – 00 மணி

Join Zoom Meeting

https://us02web.zoom.us/j/84695975744?pwd=bVd0R3lOUGt6M0NSM0JqRzIwbUppUT09

Meeting ID: 846 9597 5744

# ஐக்கிய மக்கள் சக்திக்குள் உட்கட்சி மோதல் உக்கிரம்!

## சஜித் மீது பலரும் அதிருப்தி



சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக் குள் உட்கட்சி மோதல் உக்கிரமடைய ஆரம்பித்துள்ளது எனச்செய்திகள் வெளியாகியுள்ளன.

பிரதமர் பதவியை சஜித் பிரேமதாஸ ஏற்காதமையால் அதிருப்தியடைந்த ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் கட்சியிலிருந்து விலகி, அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி ஊடாக, எதிர்கால அரசியல் பயணத்தைத் தொடரவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

கரு ஜயசூரியவை தேசியப் பட்டியல் எம்.பியாக்கி, அவருக்குப் பிரதமர் பதவியை வழங்கலாம் என கபீர் ஹாசீம் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் யோசனை முன்வைத்துள்ளனர். இதற்காக தனது தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை விட்டுக்கொடுக்க மயந்த திஸாநாயக்க தயாராகவே இருந்துள்ளார். இந்தமுயற்சிவெற்றியளிக்காததால் கபீர் ஹாசீம் உள்ளிட்ட தரப்பும் மனமுடைந்தநிலையிலேயேகாணப்படுகின்றது.

சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன போன்றவர்கள் சஜித்தை தவறாக வழிநடத்துகின்றனர் என மேலும் சில உறுப்பினர்கள், தமது சகாக்களிடம் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

## புகைத்தலால் தினமும் 55 பேர் பரிதாபச் சாவு!

(இ.கலையமுதன்)

இலங்கையில் புகைத்தல் காரணமாக தினமும் சராசரியாக 55 பேர் மரணத்தைத் தழுவுகின்றனர். அதேவேளை, வருடத்துக்குச் சராசரி யாக 20 ஆயிரம் இலங்கையர்கள் மரணிக்கின்றனர் என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் விசேட ஊடக சந்திப்பு யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊடக சந்திப்பில் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகர உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31ஆம் திகதி சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினமாக பிரகடனப்படுத் தப்பட்டு இருப்பதுடன் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் 2022ஆம் ஆண்டின் உலக புகையிலை எதிர்ப்புத் தினம் ‘சுற்றுச்சூழலைப் பாதுகாத் தல்’ என்ற கருப்பொருளில் இடம்பெறவுள்ளது.

## ரணில் அமைத்தது புதிய அரசா? ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டை மோசமான பொருளாதார நெருக்கடி தாக்கியிருக்கின்றது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. அதை நிகழ்த்தியவர்கள், அதற்குப் பொறுப்பானவர்கள் அரசில் இருந்துகொண்டுதான் இருக்கின்றார்கள். இதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்னும் பதவி விலகவில்லை. ஜனாதிபதி உடனடியாக அவராகவே பதவி விலக வேண்டும். அல்லது பதவி விலக்கப்பட வேண்டும்.

இந்த நிலைமைக்கு கோட்டாபய ராஜபக்ஷ முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஜனாதிபதி கோட்டாபய பொறுப்பேற்ற உடனேயே கொண்டுவந்த வரிச்சலுகைகள்தான் இந்த நிலைமை உருவாவதற்கு முக்கியமான காரணம். அவ்வாறான வரிச்சலுகையை தான் கொண்டு வருவார் எனத் தேர்தலுக்கு முன்னரே கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

அப்போது நிதி அமைச்சராக இருந்த மங்களசமரவீர இவ்வாறானவரிச்சலுகை இலங்கையில் அமுல்படுத்தப்பட்டால் இலங்கை லெபனான் போலவும், வெனிசூலா போலவும் மாறும் எனக் கூறியிருந்தார். அதனை நாம் தற்போது அனுபவிக்கின்றோம்.

சுதந்திரமாக நாடாளுமன்றில் இருக்கப் போகின்றோம், எதிர்த் தரப்புக்கு வந்துவிட்டோம் என்றெல்லாம் பூச்சாண்டி காட்டிவிட்டு திரும்பவும் அதே நபர்கள் போய் அமைச்சுப் பதவிகளைப் பெற்று, அதே ஆசனங்களில் அமர்ந்து இருப்பது என்பது மக்களை முட்டாள்கள் என்று நினைத்து அவர்கள் செயற்படுகின்றனரோ எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. ‘கோட்டாய ராஜபக்ஷ – மஹிந்த ராஜபக்ஷ’ ஜோடிக்குப் பதிலாக ‘கோட்டாய ராஜபக்ஷ – ரணில் விக்கிரமசிங்க’ ஜோடி அமர்ந்திருக்கின்றது..

ராஜபக்ஷ எங்கும் போகவில்லை. ராஜபக்ஷவின் ஆட்சியே தற்போது நடக்கின்றது. இந்த நிலைமை மாறாமல் பொருளாதார சிக்கலில் இருந்து இலங்கை மீளமுடியாது.

மக்களை ஏமாற்றாமல் பொறுப்பானவர்கள் பதவி விலகி அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும். ஓகஸ்ட் மாதமளவில் பாரிய பஞ்சமும் உணவுப் பற்றாக்குறையும் ஏற்படும்.

தற்போதுள்ள அரசைப் புதிய அரசு என நான் கூறப் போவதில்லை. இது புதிய அரசு இல்லை. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு அரசு அமைக்கப்படவேண்டும்.

தற்போதைய நிலையில் பொருளாதாரத்தில் நாடு சிக்குண்டுள்ள போதிலும் புதிய தேர்தல் ஒன்றை நடத்தி, அதன் மூலம் பொருளாதாரத்தை வலுவடையச் செய்து, சுமுக நிலைமையை உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் நிதியுதவியைக் கோரவேண்டும். அத்தகைய முயற்சிகளுக்கு அவர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

ரணிலும் கோட்டாவும் பதவி விலக வேண்டும். அதேநேரம் மக்கள் கோரினால் மீண்டும் பதவிக்கு மஹிந்த பதவிக்கு வருவார் எனக் கூறுகின்றனர். மக்கள் கோரியபடினால்தான் திருகோணமலை கடற்படைத் தளத்தில் அவர் போய் ஒளித்திருந்தார். மக்களின்கோரிக்கைக்கு செவி சாய்ப்பது எனில் அவர் தனது உயிரையே மாய்க்க வேண்டி வரும். அதனால் அது தொடர்பில் இனி பேசக்கூடாது. இன்று நாடு உள்ள நிலைமயில் தனியாகப் பத்து அமைச்சர்களுடன் – இராஜாங்க அமைச்சர்களே இன்றி – அரசு நடக்க வேண்டும்

அதே நேரம் அபிவிருத்தி அல்ல, மக்களிற்கு நேரடியாகவே நிவாரணத்தை வழங்குவதே மிக மிக அவசியமாகவே உள்ளது. இடைக்கால வரவு – செலவுத் திட்டமானது மக்களிற்கு நேரடியான நிவாரணம் தருவதாக இருந்தால் அதை வரவேற்கலாம்.

பாரிய கொள்கைப புரள்விற்கு ஜனாதிபதியே முழுப் பொறுப்பு. இதனை ஜனாதிபதியே ஒப்புக் கொண்டார். அதாவது செயற்கை உரத்தைத் தடை செய்தமையும், சர்வேதச நாணய நிதியத்திற்கு பிந்திச் சென்றமையும் தவறு என்கின்றார். அதனை ஒப்புக் கொண்டவர், அத்தோடு அதற்காகப் பதவி விலகின்றேன் எனவும் தெரிவித்திருக்க வேண்டும்.

இன்று வடபகுதியிலே மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்குப் பாரிய தட்டுப்பாடு காணப்படுகின்றது. இந்த நிலைமை உடனடியாக மாற்றப்பட வேண்டும். மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் உடனடியாகக் கிடைப்பதற்கான வழிகள் செய்யப்பட வேண்டும் – என்றார்.

## நான்காவது தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்



யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணம் மாவட் டத்தில் 4 ஆவது கொரோனாத் தடுப்பூசி (பைஸர்) ஏற்றும் பணி தற்போது இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில், யாழ்., நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட 3ஆவது கொரோனாத் தடுப்பூசி பெற்று 3 மாதங்கள் கடந்த அனை வரும் 4ஆவது தடுப்பூசியை (பைஸர்) பிரதி சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் முற்பகல் 11.30 மணிவரை கோண்டாவிலில் அமைந்துள்ள நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பினரின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தள்ளிப் போடப்பட்டது.

திருத்தம் தொடர்பான வரைவு அவதானிப்புகளைகட்சித்தலைவர்கள் முன்வைப்பதே இந்த கூட்டத்தின் நோக்கமாகும்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் கூடிய விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று பொதுவான ஒருமித்த கருத்து இதன்போது எட்டப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொள்ள முடியாத காரணத்தினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் வருகையுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இறுதிக் கூட்டமொன்றை நடத்தி வரைவைப் பூர்த்தி செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வாரத்தில் ஏதேனும் ஒரு தரப்பினர் மேலதிக விளக்கத்தைப் பெற விரும்பினால் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடன் அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பிரதமர் அறிவித்தார்.

## சாணக்கியன் மீது வழக்கு ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கின்றார். அவருக்கு எதிராக மான நஷ்டஈடு வழக்கு தொடுப்பேன் என ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தயா கமகே தெரிவித்தார்.

கொஹுவல பிரதேசத்தில் அமைந்திருக்கும் அவரது காரியாலயத்தில் நேற்றுத் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் முதலில் இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் ஊடக சந்திப்பொன்றின் போதும் தெரிவித்திருந்தார். நாடாளுமன்றத்தில் தெரிவித்த விடயத்துக்கு என்னால் நடவடிக்கை எடுக்க முடியாது. என்றாலும் ஊடக சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கு எதிராக எனக்கு சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

சாணக்கியன் எம்.பி. தெரிவித்திருப்பது போல் தயா கமகே ஒரு சதமேனும் மக்கள் வங்கியில் இருந்து கடன் பெற்றதில்லை.

நாங்கள் வியாபாரம் செய்கின்றவர்கள். வியாபார நடவடிக்கைக்காக தயா சமூக வியாபார நிறுவனம் மக்கள் வங்கியுடன் கடன் – கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு வருகின்றது.

ஆனால் தயா சமூக நிறுனம் பெற்றுக் கொள்ளும் கடனுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

அதனால் எனது கௌரவத்தை பாதிக்கும் வகையில் என்மீது பொய் குற்றச்சாட்டு தெரிவித்துள்ள சாணக்கியன் எம்.பிக்கு எதிராக மான நஷ்டஈடு வழக்கு தொடுப்பேன்.

மேலும் ரணில் விக்ரமசிங்கவுடன் சாணக்கியன் எம்.பிக்கு தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம்.

அதற்காக என்னை திருடர் என தெரிவித்து, ரணில் விக்கிரமசிங்கவுடன் இருப்பவர்கள் அனைவரும் திருடர்கள் என தெரிவிப்பதற்கு அவர் முயற்சிக்கின்றார். எனவே இந்த அபாண்டமான குற்றச்சாட்டை அவர் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். – என்றார்.

# மட்டக்களப்பின் அபிவிருத்தி மக்கள்நல திட்டங்களுக்கு உதவ வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அழைப்பு

## விடுத்தார் மாநகர முதல்வர் சரவணபவன்



மட்டக்களப்பு மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகள் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களை தடையின்றி முன்னெடுப்பதற்கும் மாநகர சபையுடன் கைகோர்க்க வருமாறு மட்டக்களப்பு மாநகருக்குள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களுக்கு மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் அரச – தனியார் வங்கிகள் உள்ளிட்ட நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் மாநகர சபையினருக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று கடந்த வியாழக்கிழமை மாநகர ஆணையாளர் நா.மதவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

ஒரு நாட்டில் அல்லது ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியில் தனியார் துறையின் பங்களிப்பு அளப்பரியது. தனியார் துறையினரின் பங்களிப்பு இல்லாமல் நிலையான அபிவிருத்தியை எட்ட முடியாது. அதன் அடிப்படையில் மாநகர சபையின் செயற்பாடுகளில் தனியார் துறையினரையும் பங்குதாரராக இணைத்து நிலையான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து பல மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலையில், தற்போது நாட்டில் நிலவும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்கும் வகையில், மாநகருக்குள் வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் ஒவ்வொரு நிதி நிறுவனங்களுடனும் பணியாற்ற எதிர்பார்த்துள்ளோம்.

இதன் ஊடாக மட்டக்களப்பு மாநகர சபையால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளையும், மக்கள் நலத் திட்டங்களையும் தடையின்றி முன்னெடுக்க முடியும். எனவே, மாநகர சபையுடன் கைகோர்க்க வருமாறு மட்டக்களப்பு மாநகருக்குள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அனைத்து வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பு மாநகர சபையினை இலங்கையில் ஒரு முன்னுதாரணமான சபையாகவும், அழகான நகரமாகவும் மாற்றியமைப்பதற்கு நிதி நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என தான் எதிர்பார்ப்பதாகவும், குறிப்பாக பூங்காக்கள், சந்திகளை அழகுபடுத்தும் செயற்பாடுகளை இதன் ஊடாக மேற்கொள்ள முடியும்' எனவும் இதன்போது மாநகர ஆணையாளர் நா.மதவண்ணன் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ்.லிங்கேஸ்வரன், மாநகர சபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, பிரதம கணக்காளர் ஹெலன் சிவராஜா, பொறியியலாளர் சித்திரா தேவி லிங்கேஸ்வரன் உள்ளிட்ட மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் மட்டக்களப்பு மாநகருக்குள் வணிக நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன் தமது கருத்துக்களையும் முன்வைத்திருந்தனர்.

# உப மாவட்ட ஆளுநருக்கான தேர்தலில் வென்றார் லயன் றஜித றொட்ரிக்கோ!

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இலங்கையின் 306 B1 மாவட்டத்தின் 2022/2023 லயன் நிர்வாக ஆண்டுக்கான இரண்டாவது உப மாவட்ட ஆளுநர் தேர்தலில் லயன் றஜித றொட்ரிக்கோ அமோக வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த 7, 8ஆம் திகதிகளில் லயன்ஸ் மாவட்டம் 306 B1 இன் 17ஆவது மாநாடு யாழ். தெல்லிப்பளை இராஜேஸ்வரி மண்டபத்தில் மிகவும் விமர்சையாக நடைபெற்றது.

இதன்போது இடம்பெற்ற இரண்டாம் மாவட்ட உப ஆளுநருக்கான தேர்தலில் கொச்சிக்கடை லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் றஜித றொட்றிக்கோ 60 மேலதிக வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றார்.

பட்டயக்கணக்காளரான லயன் றஜித றொட்றிக்கோ இலங்கையின் பல முன்னணி நிறுவனங்களின் கணக்காளராகக் கடமையாற்றி வருகின்றார்.

ஆளுநர் சபையில் பல உயரிய பதவிகளை வகித்து சேவையாற்றிய இவர் லயனிசத்தில் பல தலைமைத்துவப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன் அண்மையில் மும்பையில் நடைபெற்ற Advance Lions Leadership Institute இனது தலைமைத்துவப் பயிற்சியை நிறைவு செய்த பட்டதாரியுமாவார்.

கொரோனா நோய்த் தொற்றுக் காலத்தில் Lions In Need எனும் திட்டத்தை அறிமுகம் செய்து அதனூடாக யாழ். மாவட்டத்தில் ஊரடங்குச் சட்ட நடைமுறையால் தமது அன்றாட வருமானங்களை இழந்து தவித்த



பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தென்னிலங்கையிலிருந்து உலருணவுப் பொதிகள், முகக்கவசங்கள், கிருமித்தொற்று நீக்கித் திரவம் ஆகியவற்றை அனுப்பிவைத்திருந்தார். வடபகுதி லயன்ஸ் கழக உறுப்பினர்களின் இதயங்களை வென்ற இவர் இந்தத் தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளார். இளம் வயதில் ஆளுநர் தேர்வில் வெற்றியீட்டிய பெருமையையும் பெற்றுள்ளார்.

# இலங்கை தலைகீழாக இருவருடத்தில் மாற்றம்!

## யார் பொறுப்பு என்கிறார் பொன்சேகா

2019 ஆம் ஆண்டு இலங்கையில் காணப்பட்ட பொருளாதார நிலையை முன்னாள் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தகவல் வெளியிட்டுள்ளார்.

பேஸ்புக்கில் பதிவொன்றை பதிவிட்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

2019இல் பொருள்களின் விலைகள் அவர் வெளியிட்ட தகவலுக்கு அமைய ஒரு இறாத்தல் பாண் 50 ரூபாயில் காணப்பட்டது. இந்த விலை 74 ஆண்டுகளுக்கு முன்னர் அல்ல 2019ஆம் ஆண்டில் என சுட்டிக்காட்டியுள்ளார்.

2019 ஆம் ஆண்டில் எரிவாயு சிலிண்டனர் ஒன்று 1350 ரூபா, ஒரு மூடை சீமெந்து 850 ரூபா, ஒரு லீற்றர் டீசல் 120 ரூபா, ஒரு லீற்றர் பெற்றோல் 140 ரூபா, குறைந்தபட்ச பஸ் கட்டணம் 12 ரூபாவுக்கு காணப்பட்டது.

இதற்கு யார் பொறுப்பு?

ஓட்டோவின் முதல் கிலோ மீற்றர் கட்டணம் 50 ரூபாவுக்கு காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஒரு பக்கட் பால் 30 ரூபாவுக்கும், 400 கிராம் பால் மா பக்கட் 320 ரூபாவுக்கும், பருப்பு ஒரு கிலோ கிராம் 115 ரூபாய்க்கு, அரிசி ஒரு கிலோ கிராம் 100 ரூபாய்க்கும் காணப்பட்டது.

அப்படி என்றால் இது 74 வருட பிரச்சினை அல்ல. 2019 ஆம் ஆண்டு ஊடகத்தில் பிரபல கதாபாத்திரமாக இருந்தவருக்கு அடையாளமிட்டதன் முட்டாள் தனத்தால் ஏற்பட்ட ஒரு பிரச்சினையாகும். – என அவர் தனது பதிவில் பதிவிட்டுள்ளார்.

# 'கோட்டா கோ கம'வுக்கு இன்று ஐம்பதாவது நாள்!

## முற்பகலில் மெழுகுவர்த்திப் போராட்டம்



'கோட்டா கோ கம' போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இன்று 50 நாள்கள் நிறைவடையவுள்ள நிலையில் மெழுகுவர்த்திஏந்தும்போராட்டமொன்றிற்குதிட்டமிடப்பட்டுள்ளது. போராட்டத்தின் ஐம்பதாவது நாளான இன்று காலை பத்து மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

அதற்கு இணையாக 'கோட்டா கோ கம'விலும் பண்டாரநாயக்க சிலை அருகேயும் மெழுகுவர்த்தி ஏந்தும் போராட்டம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'நாட்டுக்காக மெழுகுவர்த்தி ஏந்துவோம்' என்ற தலைப்பிலான இந்தப் போராட்டத்தில் கோட்டா கோ கமவுக்கு ஆதவரளிக்கும் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த போராட்டத்தில் கலந்து கொள்ள வருகை தருகின்றவர்கள் தேசியக் கொடி மற்றும் 21ஆம் திருத்தச் சட்டம் தொடர்பான பதாகைகளுடன் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பாட்டும் நானே? ...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:-** எரிபொருள் இல்லாமல் தற்போது மக்களின் வயிறெரியத் தொடங்கியிருக்கிறது. அவர்களும்தான் என்ன செய்வார்கள்? பொருள்களின் விலை கிடுகிடுவென சிகரம் நோக்கி உயர்கிறது. வருமானமோ அதே வேகத்தில் பாதாளம் நோக்கி வீழ்கிறது. இந்நிலையில் மக்கள் படும்பாடு சொகுசு வாகனங்களில் ஓடித் திரியும் தலைவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆட்சிப்பொறுப்பேற்கவும் அமைச்சுப் பொறுப்பேற்கவும் இன்றைக்கும் சண்டை பிடிக்கிறவர்கள்தான் மக்களின் இந்தச் சண்டைக்கும் பதில் சொல்லவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'பின்னை இட்ட தீ தென்னிலங்கையில்'.... வாழ்க பட்டினத்தார்.**

**6. கேள்வி:-** நடந்து முடிந்த கலவரங்களைத் தொடக்கி வைத்தவர்களையும், கலவரங்களில் ஈடுபட்டவர்களையும் வேகமாக அடுத்தடுத்துக் கைது செய்வதைப் பார்த்தீர்களா?

**பதில்:-** பார்த்தேன். பார்த்தேன்! எரிச்சல்தான் வருகிறது. முன்பு தமிழர்களுக்கு எதிராக நடந்த இனக்கலவரங்களும் பகிரங்கமாகத்தான் நடத்தப்பட்டன. அப்போது நம் காவல்துறையினர் ஒருவரையும் கைது செய்ததாய்த் தெரியவில்லை. இப்போது மட்டும் அது எப்படி முடிகிறது? என்று கேட்கத் தோன்றுகிறது. அன்றைக்கே இந்தக் காரியத்தைச் செய்திருந்தால் இன்றைக்கு இந்தக் கதி நிகழ்ந்திருக்காது. சட்டத்திற்குக் கட்டுப்படத் தேவையில்லை என்று மக்களுக்கு அன்று பயிற்றுவித்தார்கள். இன்று மக்கள் அந்தப் பயிற்சியின் முதிர்ச்சியை அவர்களிடமே காட்டியிருக்கிறார்கள். தீட்டிய மரத்திற்கே விழுந்த வெட்டு இது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * உனக்கு வந்தா இரத்தம். எனக்கு வந்தா தக்காளி 'ஷோஸாடா?' வாழ்க வடிவேலு!**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.05.2022இல் வெளியிடப்பெற்றது.